பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இஃது

இரத்நமுகம்மது

காரணசரித்திரம்.

1A 129/2-75

1875

இவை

பாசிப்பட்டணம்,

மீருராவுத்தரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

மதுரை,

இபுறுகீம்புலவரவர்களாற்

பார்வையிடப்பட்டுச்

சித்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியாரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ வருஷம்.

பிசுமில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

இரத்நமுகம்மது

காரணசரித்திரம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன் - வல்ஆகிபதோ-லில் முத்தகீன்- வஸ்ஸலாதோ வஸ்ஸலாமோ- அலாறசூலிஹி ஸய்யதினா முகம்மதின் - வஆலா ஆலிஹிவ அஸ்ஹாபிஹி வமனித்தப அஹும் அஜமயீன்.

எல்லாப் புகழ்ச்சியும் வணக்கமும் எற்றுகின்ற அல்லாகுசுபகானஹு தஆலா அவனுடைய தூதராகிய சர்வலோ ஆலம் நபிசல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் முன்னுள் ஒளிவா யிருந்ததும்- பின்பு பூலோகத்தில் பிறந்ததும் - பின்பு தீவினைவிளைவித்ததும் - அதில் காண்பித்த சிலகாரணங்களும் - பின்பு மிஹறாஜுக்குப் போனதும்- பின்பு மதீனத்துக்கு ஹிஜாத்தானதும் - பின்பு வபாத்தானதும்- இதுகளையெல்லாம் கசுசுல் அன்பியா - ப்வயாதுல்பதுரியா - ஹக்கீதுபெஹிகீது - ஜிரு ஜுக்கீர் தகாயருல் அக்பார் நூர்நாமா-மதாரி சுன்னுடுவா இன்னஞ்சிலகிதாபுகளில் எழுதியிருந்தவையில்சிலதை பெருக்கிகோர்வைசெய்து இதற்கு இரத்நமுகம்மதுகாரணசரித்திரமென்று பேரும் வைத்து இதையாவர்க்கும் எளிதிற்றெரியும்பொருட்டு - பேட்டை ஆழுரிலிருக்கும் வாலேபாவாசாயபு குமாரனாகிய அப்துல்காதர் சாயபு விளங்கச்செய்தது.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லம் அதிசில் திருவுளமா யிருக்கிறார். இந்தகிதாபிலுள்ள சங்கதியை யாதாமொரு மூமினானவன் இதை ஓதினாலும் - அல்லது இன்பத்துடனே காது கொடுத்துக் கேட்டாலும் அல்லது ஓதத்தெரியாதவன் ஓதினவரை ஓதச்சொல்லக்கேட்டாலும் - அல்லது இதை எழுதி தன் வீட்டில் ஓதவேணுமென்று ஆசையோடு வைத்திருந்தாலும் அவர்களுக்கு அக்கு சுபுகானுத்தஆலா இரண்டு லோகத்தின் வாழ்வும் வெற்றிமாராயமும் சங்கையும் நற்குணமும் நற்செய்கையும் நல்வழி ஒழுக்கமும் நிறைந்த பூரண வணக்கத்தின் தருவாரும் இம்மையில் கொடுத்து மறுமையில் நரகத்தின் வேதனையும் கொடூர வேள்வியும் பொல்லாத வருத்தமும் கண்டிப்பாகிய தண்டனையுங்கொடாமல் சொர்க்கத்தின்வாழ்வும் அந்த சொர்க்கத்திலுள்ளகூறலீன் பெண்களுடைய வாழ்வும் அந்த இன்பமும் ஆபெகவுஸர் குளத்தின் தண்ணீரும் ஆபெஹயாத்தின் தண்ணீரும் திராகில் தன்மைகளும் சிறத்தில் முஸ்தகீ மென்னல்போலக்கடக்கவும் பட்டோலை வலதுகையிலும் அர்சின்நிழலும்

ம்மெய்யில் குட்டிக்குருடையும் நிருமாணத்துக்கு உடையும் இன்
னம் பலபல நன்மகிழ்ச்சியும் பெறுவான் - இன்னம்யாதாமொரு
வன்றெரிந்தும் தெரியாமையுஞ்செய்த சிறுபாவமும் பொறுக்கப்
படும் இன்னம் சக்ருத்தின்பொல்லாதவேதனையும் நீங்கும் அவ்வே
ளையில் கண்ணெறிமழுங்கிபோகாமல் மிகுத்தஒளிவையுங்கண்ணுக்
குக்கொடுப்பான் கபுரின்கேள்வியும் ஆசாபைக்கபுரில் எலும்புகளு
ம்நொருங்கிப்போகாது அல்லாகுத்தஆலா இதை அறிந்தவனுடை
ய ஈமானை ஷயித்தாக்கொண்டுங் காப்பாற்றுவான் - இன்னம் நாற்
பது அச்சுசெய்தபலனும்- தவுறேத்- சப்பூர்-இஞ்சில் - பொருகான்
இந்த நாலுவேதம் ஓதின பலனும் பெறுவான்- இன்னம் அவன்
தாய்தகப்பன் குற்றமும் - அவன் எழுபது தலை முறையின் குற்
றமும் பொறுக்கப்படும் - இன்னம் இதன்பலன் தன்மை தாவி
ணமாபேசப்பட்டவர்கள் நம்மை தாவிணமும்பேசார்கள் புறமும்
பேசார்கள்-அவனை நன்மையாளிகள் கூட்டத்தில் சேர்த்துவிடுவா
ன்- இன்னம்பீசபீலுடைய நன்மையும் ஷஹீதுக்களுடைய மருங்கு
ங் கிடைக்கப்படும், தச்சாலுடைய நிவிணையிலகப்பட ஒட்டாமல்
அவனை காப்பாற்றிக் கொள்வான் இன்னம் அவனுக்கு சொர்க்கத்தி
லிடம் தேமைகமாகாமல் துனியாவில் மவுத்தாகவுமாட்டான்.

இன்னம் அபீருல் மூமினீன் அலிகர்ரமல்லாஉ வஜ்ஹஉரிவா
யத்துச் செய்திருக்கிறார் - சர்வரோ ஆலம் நபிசல்லல்லாகு அலேகி
வசல்லம் திருவுளமாயிருக்கிறார் - நான் மிஃறாஜில் அலேகுஸ்ஸெலா
த்தைக் கேட்டேன் - இந்தக் கிதாபி லிருக்கும் சங்கதியை இஃதிக்கா
டனே படித்தவர்களுக்கும் இஃதிக்காடனே கேட்டவர் களுக்கும்
இதை ஓதிக் கொண்டிருக்க வாங்கி வைத்தவர்களுக்கும் அல்லா சுப
காலுத்தஆலா கியாமத்து நாளையில் என்னபலனைக் கொடுப்பானெ
ன்றுகேட்டேன் - அதற்கு அவர் அவனுக்கு அல்லா உத்த ஆலாறஹ்
மத்தைக் கொடுப்பான் - இன்னம் எழுபது வருஷம் பகல்நோன்பு
வைத்து இரவெல்லாம் வணக்கஞ் செய்தவர் நன்மையுங் கொடுப்
பான் - காபர்களுடனே எழுபது தரம் சண்டை செய்த நன்மை
யுங் கொடுப்பா னென்று சொன்னார் இன்னம் இந்தக் கிதாபை விசு
வாசத்தோடே வைத்து புகழ்ச்சி செய்பவர்களுக்குமில்லிருளியமு
மொரு - அவர்கள் கல்பிலுள்ள பருதாக்களும் வெளிப்பட்டு கல்
பும் வெளிச்சமாகும்-இன்னம் அத்தப்பெஹஷ்த்து கிதாபில் சொ
ல்லப்படுகிறது எப்படியானால் சர்வரோ ஆலம் நபிசல்லல்லாகு அ
லேகிவசல்லமுடைய சிக்கிராணது எல்லாசிக்கிர்களிலும் தலைமையா
னதாயிருக்குமென்று ஆலிம் உலமாக்கள் எல்லவருஞ் சொல்லியி
ருக்கிறார்கள் - அதெப்படியானால் கல்புடையவன்றுடிக்கு ககத்
தைப்போலவும் இராவுக்கு வெளிச்சமாக்கப்பட்டதாகவும் நெஞ்சி
னுடையவீட்டுக்கு ஒரு நாராக விளக்கைப்போலவும் உயிரினு

டைய தோப்புக்கு மழையைப்போலவும் இன்னம் அந்தசிக்கிரினல்
துக்கம்துயர நீங்கும் - சந்தோஷமும் வாழ்வுமுண்டாகும் நீங்காத
வியாதியும் நீங்காத தரித்திரமும் நீங்கிப்போகும் - இந்தசிக்கிரினல்
இவன்குற்றமெல்லாம் பொறுக்கப்படும் இவனுடைய அக்குலேநர
கமும் அவிந்துப்போகும் சுவர்க்கத்தினுடைய நற்பதவியுங்கிடை
க்கும் இதுவல்லாமல் இன்னம் எழுதிமுடியாத பலன்களும் கிடை
க்கும்-ஆகையினலே மூமீனனவர்களே இதைஇரவும்பகலும் மிகுத்
த இன்பத்துடனே ஓதவேண்டும் சிக்கிர்செய்யவேண்டும் - அல்லா
சுபகானுத்த ஆலாகுறஆனில் சிக்கிரும் ஆலமீனென்றும் அவர்பே
ரை திருவுளமாயிருக்கிருன் முன்னுள்ளநபிமாரெல்லாம் நாயனே
எங்களுக்கு நபிபட்டம்வேண்டாம் முகம்மது நபிசல்லாகு அலே
கிவசல்ல முடைய உம்மத்தில் தாகல்செய்என்று துவாக்கேட்டார்க
ளப்படிபோல்கொத்த உயர்ந்ததீனுக்கும் அந்ததீனில் உள்பட்டமு
மீனனபேர்களே நாம்புள்எப்படி சிக்கிர்செய்யவேணும் பாருங்க
ள் ஆகையினலே ஈமானுள்ளவர்களே நல்லவணக்கமுள்ளவர்களேந
ல்நடப்புள்ளவர்களே நன்று ஆலோசித்துநம்பசர்வரோ ஆலம்நபி
சல்லல்லாகு அலேகிவசல்லத்தை லவுலாக்கென்று குருனில் அல்லா
சுபகானுத்த ஆலா தான்மிகவும் புகழ்ச்சிசெய்திருக்கிருன் அப்ப
டி அல்லாகுத்தஆலா புகழ்ச்சிசெய்யதாம்பள் அவருடைய தீனிலா
ய் அவர்கலிமாவை ஓதப்பட்டவர்கள் எப்படி புகழவேணும் ஆன
படியினலே மூமீனனபேர்களே இதை எழுதிவைத்துக்கொண்டு
இரண்டு றக்காஅத்து நபில்தொழுதுக்கொண்டு யிந்தகிதாபைதினந்
தோறும்ஓதிவாருங்கள் உங்களுக்குமேல் எழுதிய பிரயோசனமும்
கிடைக்கும்கியாமத்தில் அல்லாசுபகானுத்தஆலா உடையதீதாரு
ம்சர்வரோ ஆலம்நபிசல்லல்லாகு அலேகிவசல்லமுடைய ஷபாயத்
தும்கிடைக்கும்நாயனே நீ எல்லவர்க்கும் இதை ஓதும்படியாவு
ம்மேலெழுதியபலன்களை பெறும்படியாவும் நீ உதவிசெய் ஆமீ
ன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்

நூறுநாமா வென்னும்கிதாபில் சொல்லப்படுகிறது என்ன
வென்றால் அக்குத ஆலாமுதல்சர்வரோ ஆலம்நபிசல்லல்லாகு அலே
கிவசல்லம் அவர்கள் ஒளிவைப்படைத்து அவ்வொளிவைப்பார்த்து
திருவுளமானுன் என்னுடைய ஒளிவுந்தெளிவுமுள்ள ஒளியே உன்
னைக்கொண்டு நான் பதினெண்ணுயிரம் ஆலமும் அதிலுண்டான
படைப்புகளும் ஆதமையும் அவ்வாவையும் உண்டாக்கிசகலகாரண
ங்களும் விளைப்பேன் என்றுசொல்லி அவ்வொளிவைப்பார்த்து
சுஜுதுச்செய்யச் சொன்னுன் அவ்வொளிவு அந்தஆலாவுக்கு சஜு
துச்செய்தது அப்போது அல்லாசுபகானுத்தஆலா அந்தஒளிவை
ப்பார்த்து என்னுட்டமும் தேட்டமும் நீயேயல்லாமல் வேறெ
ன்றுமில்லையென்று திருவுளமானுன் பிறபு தன்னுடையசிருஷ்டியி

னாலே எழுகடலைப் படைத்தான் அதின்முதல் அறிவென்னுங் கட
ல் - ௨ - வது அக்கலென்னுங்கடல் - ௩ - வது சபரென்னுங் கடல்-
௪-வது நியாமத்தென்னுங்கடல் - ௫ - வது பக்கருவென்னுங்கடல்-
௬ - வது நியாமத்தென்னுங்கடல் - ௭ - வது ஒளிவென்னுங்கடல்
இப்படி எழுகடலை யுண்டாக்கி ஒவ்வொரு கடலில் அந்த ஒளிவை
எழுபதினாயிரம் வருஷம்வைத்து அவ்வொளிவை தன் குதரத்திஞ
ல் மயில்வடிவாக்கினான், அம்மயிலே அயபத்தென்னும் பார்வை
யைக்கொண்டுபார்த்தான் - அப்பார்வையால் மயிலானது நடு நடு
ங்க அம்மயி லிருந்து லக்ஷத்திருபத்து நாலாயிரத்துளிகள் விழுந்
தது அதிலிருந்து மூன்னூற்றுப் பதிமூன்று துளிகள் வெவ்வேறு
கப்பிரிந்து நின்றது அதில் மூன்னூற்றுப் பதிமூன்று முருசலான
நபிகளையும்படைத்தான் - மற்றத் துளிகளினால் மற்ற நபிமாரையும்
படைத்தான் - அதின் வலதுகண்ணிலிருந்து இரண்டு துளிவிழுந்த
து-அந்த இரண்டு துளியில் ஒரு துளியில் சிபுறாயீல் அலை
ஹிஸ்ஸலாத்தையும் இரண்டாந் துளியில் மீக்காயீல் அலைகிஸ்ஸலா
த்தையும்படைத்தான் - இடதுகண்ணிலிருந்து இரண்டுதுளிவிழு
ந்தது-அதில் ஒருதுளியில் இசுறாயீல் அலைகிஸ்ஸலாத்தையும் இர
ண்டாந்துளியில் இசுறாபீல் அலைகிஸ்ஸலாத்தையும் படைத்தான்-
வலதுகாதிலிருந்து இரண்டுதுளிவிழுந்தது - அதில் ஒருதுளியில்
லகு மஹபூசும் - இரண்டாம்துளியில் கலமும் படைத்தான் இட
து காதிலிருந்து இரண்டு துளிவிழுந்தது - அதில் ஒருதுளியில்
அரசும் - இரண்டாந்துளியில் குருசையும் படைத்தான் மூக்கிலி
ருந்து இரண்டுதுளிவிழுந்தது - அதில் ஒருதுளியைக் கொண்டு
சுவர்க்கமும் இரண்டாந்துளியில் நரகமும்படைத்தான் - புருவத்தி
லிருந்து இரண்டுதுளிவிழுந்தது - அதில் ஒரு துளியில் பொழு
தும் இரண்டாந் துளியில் நிலவும் படைத்தான் - வலதுகையிலிருந்
து அஞ்சுதுளிவிழுந்தது - அதில் ஒருதுளியில் சிதறத்துல் முன்
தகாவென்னுமரமும் இரண்டாந் துளியில் தோபாவென்னு மரமு
ம் மூன்றாந் துளியில் அவ்செ கவுச ரென்னுங் குளமும் நாலா
ந் துளியில் எழுவானமும் எழுபூமியும் அதிலுண்டான படை
ப்புகள் அடங்கலும் அஞ்சாந்துளியில் எழுபத்து கிடைபதினென்
ணாயிரபடைப்பையும் படைத்தான் இடதுகையி லிருந்து அஞ்
சுத்துளி விழுந்தது அதில் ஆதநபி யுடைய ஆசாவும் இரண்டாம்
துளியில் சுலைமாநபியுடைய மூத்திரை மோதிரமும் - மூன்றாந்
துளியில் ஆபென்னுங் குளமும் - நாலாந்துளியில்இடியும் - அஞ்
சாந்துளியில் மின்னலும்படைத்தான் என்றுசொல்லி யிருக்கிறது
இன்னம்இப்படியுமா ஒருகித்தாபில் சொல்லியிருக்கிறது அக்தஆ
லா இவ்வானம்- இப்பூமி- அரசு-குருசி- லகு-கலம்-சுவர்க்கம்- நரகம்
மலக்குகள்- ஜின்கள் மனிதர்கள் நபிமார்கள்மற்றுமுண்டானபடை

ப்புகள் யாதொன்றையு முண்டாக்காததுக்குமுன் ஆதியில் சர்வமோ ஆலம்நபிசல்லல்லாகூ அலேகிவசல்லமுடைய ஒளிவை யுண்டாக்கி அவ்வொளிவை தன்குதரத்தைக்கொண்டுதன்னுடைய - பெருமையானமுஷாகிதாவும் - தசுபீக்கும் சிசுதாவும் தவ்வாபும் செய்துக்கொண்டிருக்கும்படியாய்ஒளிவினாலெத்தனை யெத்தனையோ திரைகளுண்டாக்கி அத்திரைக்குள்வைத்தான் அத்திரையில் ஆயிரவருஷம் தவ்வாபும்சிசுதாவும் முஷாயிதாவும் தஸ்பீகும் செய்துக்கொண்டிருந்தது அவ்வருஷத்தில் ஒவ்வொருவருஷம் எப்படி நீண்டவருஷமையானா லிந்தபூலோகத்தில்வருஷம் ஆயிரவருஷமுஞ் சேர்ந்தால் அந்தவருஷத்தின் ஒருநாளாயிருந்தது - இப்படிபோத்கொத்த நீண்டநாளும் நீண்டமாதமுஞ் சேர்ந்தவருஷமாயிருந்தது இன்னம் பன்னீராயிரவருஷ மிருந்ததாயும் கோட்டிவருஷ மிருந்ததாயும் எத்தனை எத்தனையோநாள்களிருந்ததாயும் ரிவாயெத்துகளிற்சொல்லப்படுகிறது இதை ஹதீதைக்கொண்டு தசாயகுல் அக்பாரென்னும்கிதாபில் சொல்லுகிறது ஹக்தஆலாசர்வமோ ஆலம்நபி சல்லல்லாகூ அலேகிவசல்லமுடைய ஒளிவை மயில்வடிவாகச் செய்துவெண்முத்தினால் திரைகளுண்டாக்கி அதை அதற்குள் வைத்து ஷஜாத்து எகீனென்னு மரத்தை யுண்டாக்கி அம்மரத்துக்கு நாலு கப்புகளையுண்டாக்கி அம்மரத்தில்வைத்தான் - அம்மரத்தில் அம்மயில் எழுபதினாயிர வருஷம் அல்லாகுத்த ஆலாஉடைய தஸ்பீகு செய்துக்கொண்டிருந்தது அதன்பின்பு அக்குத ஆலா வெட்க மென்னுங்கண்ணாட்டியை உண்டாக்கி அம்மயிலுக் கெதிரோ நிறுத் தாட்டினான் அக்கண்ணாடியை அம்மயிலானது பார்த்து அதில் தன்னுடைய மிகுத்த அழகையும் வடிவையுங்கண்டு வெட்கிற்று அல்லாகுத்த ஆலாவுக்கு அஞ்சு சுஜுதுச்செய்தது அந்த அஞ்சு சுஜுதும் அவர்பேரில் பரசுகளாச்சுது எப்படியானால் அல்லாகுத்த ஆலா அந்த அஞ்சு சிசுதாவைக் கொண்டு அவர் பேரிலும் அவருடைய உம்மத்துகள் பேரிலும் அஞ்சு நேரத்துத் தொழுகையை கட்டளையாக்கி உத்திரவுசெய்தான்- பின்பு அல்லாகுத்த ஆலா என்னுடைய ஒளிவாகிய மயிலே உன்னுடைய நாலுபக்கமும் பாரென்றான் - அப்படியே அம்மயில் நாலுபக்கமும் பார்க்கும் போது தனக்கு முன்னாலே ஒருஒளிவு பின்னாலேஒருஒளிவு வலதுபக்கமொருஒளிவு இடதுபக்கமொருஒளிவு யிருக்கக்கண்டது- அந்நாலுஒளிவும் நாலுபேர்களுடையஒளிவாம் - அதன்பின்பு அந்தமயில்வடிவாகிய ஒளிவானது எழுபதினாயிரம் வருஷம் அல்லாகுத்த ஆலாவி னுடைய தஸ்பீக்குசெய்துக்கொண்டிருந்தது - இவ்விதமாக சர்வமோ ஆலம்நபிசல்லல்லாகு அலேகிவசல்லமுடையஒளிவு இலங்கிக்கொண் டிருந்தது அதன் பின்பு அம்மயில் எத்தனையோ மூச்சுகள் விட்டது- அந்த மூச்சுகளைக் கொண்டு - நபிமார்கள் சகிதுகள் - சித்தீகு

கள் - சாலிகுகள்- முமீன்களுடைய அருவாகுஅடங்கலையும் மலக்கு
களடங்கலையும் - மற்றுமுண்டான படைப்புகள் அடங்கலையுமுண்
டாக்கினன் - இன்னம் ஒருரிவாயத்தில் சொல்லப்படுகிறதுஅல்லா
குத்தஆலா அந்தஒளிவைமுத்தாகச்செய்து அதைத்தன்னுடையகுத
ரத்தான பார்வையைக்கொண்டு பார்த்தான் அதனால்அம்முத்துத
ண்ணீராயுருகி அத்தண்ணீர் ஆயிரவருஷம் அலைத்துக் கொண்டிரு
ந்தது அதன்பின்பு அல்லாகுத்த ஆலா அத்தண்ணீரைப் பத்துபங்
காகப்பிரித்து அவையில் ஒருபங்கில்- அரசையும்-இரண்டாம்பங்கி
ல் குருசையும், மூன்றாம்பங்கில் லகுமகபூசையும்,நாலாம் பங்கில்
கலத்தையும் . அஞ்சாம்பங்கில நிலவையும், ஆறும் பங்கில் பொ
ழுதையும் - ஏழாம்பங்கில் சுவர்க்கத்தையும், எட்டாம்பங்கில் நரகங்
களையும் - ஒன்பதாம்பங்கில் மலக்குகளையும், பத்தாம் பங்கில் சர்
வலோ ஆலம் நபிசல்லல்லாகூ அலைகிவசல்லம் அருவாகையுமுண்டா
க்கினன்-இன்னம் கசுகல் அன்பியாவில் சொல்லப்படுகிறது அல்லாகு
த்தஆலா சர்வலோஆலம் - நபிசல்லல்லாகூஅலைகிவசல்லமுடைய ஒளி
வை நாலுபங்காகப்பிரித்து அவையில் ஒருபங்கில் அரசையும் இர
ண்டாம்பங்கில கலத்தையும் மூன்றாம்பங்கில் சுவர்க்கத்தையும் நா
லாம்பங்கைக்கொண்டு மற்றபடைப்புகள் அடங்கலையுமுண்டாக்கி
னன் இன்னம் அந்தநாலுபங்கு ஒளியிலிருந்து நாலுபங்குஒளியெ
டுத்து அவையில் ஒருபங்கு ஒளியில் நபிசல்லல்லாகூஅலைகி வச
ல்லத்தையும், இரண்டாம் பங்கில் அறிவையும் - மூன்றாம் பங்கில்
வெட்கத்தையும்- நாலாம்பங்கில் இஷ்க்கையுமுண்டாக்கினன்-இன்
னம் தகாயகுல் அக்பாரில்சொல்லப்படுகிறது அந்த ஒளியாகியமயி
லே அல்லாகுத்த ஆலா உற்றுப்பார்த்தான்- அதனால் அம்மயிலினு
டையசரீரமெல்லாம் நடுங்கி வேர்வைகளை விட்டது அப்போது
அதன்தலையின் வேர்வையினால் மலக்குக ளடங்கலையும் - முகத்தி
னுடையவேர்வையினால் -அரசு,குருசி,லகு, கலம், பொழுது, நில
வு, நக்ஷத்திரமுதலான வானத்திலுள்ளவைகள் அடங்கலையும் அத
ன் மார்பினுடையவேர்வையினால் நபிமார்கள் முருசல்கள் ஆலீம்
கள் சகீதுகள் சாலீகுகள் அடங்கலையும் அதன் புருவத்தினுடைய
வேர்வையினால் ஈமானுளிகள் அடங்கலையும் அதன்காதினுடையவே
ர்வையினால் - எகூதி நஸ்றானிகள் மகுசிக ளடங்கலையும் மற்றக்
காபரளடங்கலையும் - அதன்முதுகினுடைய வேர்வையினாலே ப
யித்துல் மஹ்முர் காபா பயித்துல் முகத்தசு முதலான மசீதுகளு
ள்ள இடங்களடங்கலையும் அதன் காலினுடையவேர்வையினால் எழு
வானிலிருந்து பூவான் வரைக்கும் பூமிஅடங்கலையும் அதிலுள்ள
வையடங்கலையுமுண்டாக்கினன் இப்படிஅல்லாகுத்தஆலா சர்வலோ
ஆலம் நபிசல்லல்லாகூ அலைகிவசல்லமுடைய ஒளியினால்சகலமா
னபடைப்புகளையுமுண்டாக்கி அப்போதுநபிமார்களுடைய அரு

வாருகள் அடங்கலையும்,லாயிலா ஆயில்லல்லாகூ முகம்மதுர்ரசூலு
ல்லாஹி என்றுகலிமாவை ஓதவைத்தான், பவாயது யதுரியாவில்
சொல்லப்படுகிறது சர்வலோஆலம் நபிசல்லல்லாகூ அலேகிவசல்ல
முடைய ஒளிவுக்கு அந்தநபிமார்களுடைய ஒளிவே பார்க்கும் படி
யாய்உத்திரவுசெய்தான் அப்படியேபார்க்கும்போது அந்தபார்வை
யினுடைய ஒளிவுபோய் அந்தநபிமார்களுடைய ஒளிவேயெல்லாமூ
டிக்கொண்டது அதைஅந்தநபிமார்கள் பார்த்துநாயனேயாருடை
யஒளிவு எங்களைஎல்லாம்வந்து மூடிக்கொண்டதென்று கேட்டார்க
ள் அதற்கு அல்லாருத்த ஆலா இது அப்துல்லா உடையமகன்முகம்
மதுடையஒளிவு இவர் பேரில் நீங்கள் எல்லாரும் ஈமான்கொண்டுவ
ந்தால் உங்களுக்குதான் நபிபட்டங்கொடுப்பேனென்று சொன்
னதை அந்தநபிமார்களெல்லாங்கேட்டு நாயனே நாங்கள்எல்லபே
ரும் இந்த முகம்மதுபேரிலும் இவருடைய நபிதனத்தின்பேரிலு
ம் ஈமான்கொண்டு வந்தோமென்று சொன்னார்கள்- அதைக்கேட்டு
அல்லாருத்த ஆலாஇதற்கு நானும் சாட்சியானே னென்று சொன்
னான்-இன்னம் அல்லாருத்தா ஆலாநபிமார்களுடைய அருவாருகள்
மனிதர்களுடைய அருவாருகளடங்கலையு முண்டாக்கினவுடனே எ
ல்லா அருவாருகளிடத்திலும் எக்ரார்செய்வித்துக்கொண்டான் எப்
படியானால் எல்லாஅருவாருகளையும்நிறுத்தினான் -உங்களுடைய ரப்
பல்லவாவென்றுகேட்டான் - அதற்குஅந்த அருவாருகளெல்லாம்
நீ எங்களுடைய றப்புதானே அதை நாங்கள் கபூல்ச் செய்துக்கொ
ண்டோமென்று எக்ரார்கள் செய்தார்கள் அவர்களில் முந்தின எக்
ரார் செய்தவர்முகம்மது நபிசல்லல்லாகூ அலேகிவசல்லமாம் அத
ன்பின்பு அல்லாசுபுகானுத்தா ஆலா சர்வலோஆலம் நபிசல்லல்லாகூ
அலேகி வசல்லமுடைய ஒளிவிலிருந்து மனிதர்களுடைய அருவா
கையுண்டாக்கினான் அதன்பின் அந்த ஆலாநபியுல்லா துனியாவில்
எப்படியிருந்தாரோ அதேபடிக்கு அந்த ஒளிவேஉருப்பத்திசெய்
துதொழுகையி னிலையிலிருப்பதுபோல நிறுத்தி சிவந்தமாணிக்க
த்தினால் ஒருகிந்திலுண்டாக்கி அதைக்கொண்டு அவலா மூடிவிட்டு
நபிமார்கள்மனிதர்கள் அருவாருகளடங்கலையும் அந்தகிந்திலைச்சுற்
றிதவ்வாபுசெய்துக் கொண்டிருக்கும் படியாகவைத்தான் அப்படி
அந்த அருவாருகளெல்லாம் எழுபதினாயிரவருஷம் அந்த கிந்திலை
ச்சுற்றி தவ்வாபு செய்துக்கொண்டிருந்ததுகள், அதன்பின்அல்லா
ருத்த ஆலா அந்தக்கிந்திலைத் தூக்கிவிட்டு அருவாருகளைப்பாரென்று
சொன்னான் - அப்படியே அந்தஅருவாருகள் அடங்கலும் பார்க்கு
ம்போது சர்வலோஆலம் நபிசல்லல்லாகூ அலேகிவசல்லம் தெரியலா
ம் அந்த அருவாருகளுடைய கூட்டங்கள் வெகுயிருதியா யிருந்தப
டியினாலே அவர்களுக்கு நபியுல்லாவி னுடைய உருப்புகளில்

சிலபேருக்குத் தலையும் சிலபேருக்கு நெத்தியும் சிலபேரு
க்குப் புருவமும் சிலபேருக்குக் காதும் சிலபேருக்குக் கண்
ணும் சிலபேருக்குக் கன்னமும் சிலபேருக்கு மூக்கும் சில
பேருக்கு வாயும் சிலபேருக்குத் தாடியும் சிலபேருக்குப் பிடரி
யும் சிலபேருக்குத் தோளும் சிலபேருக்குக் கைகளும் சிலபேரு
க்குமார்பும் நெஞ்சும் சிலபேருக்கு முதுகும் சிலபேருக்கு விலா
வும் சிலபேருக்குவயறும் சிலபேருக்குமுழங்காலும் சிலபேருக்கு
கால்படங்களும் தெரியலாய்ப்பார்த்தார்கள் - அவர்களில்தலையைப்
பார்த்தவர்கள் கலீபாக்களும் சுல்தான்களுமானார்கள், நெற்றியை
ப்பார்த்தவர்கள் நீதமுள்ள அமீர்களானார்கள் புருவங்களைப்பார்த்த
வர்கள் சித்திரம்எழுதப்பட்டவர்களானார்கள், காதுகளைப்பார்த்தவ
ர்கள் பணக்காரரும் தவுலத்துக்காரர்களுமானார்கள், கண்களைப்பா
ர்த்தவர்கள், குறுஆன்வாய்ப்பாடம்ஓதப்பட்டஆபிஸ்களானார்கள் - க
ன்னங்களைப் பார்த்தவர்கள் கசாவத்தாளிகளும் அறிவாளிகளுமா
னார்கள், மூக்கைப்பார்த்தவர்கள் அக்கீம்களும்அத்தார்களுமானார்
கள், வாயைப்பார்த்தவர்கள் எந்நேரமும்நோன்பு வைக்கப்பட்ட
வர்களானார்கள், உதட்டையும் பல்லையும்பார்த்தவர்கள் அழகானமு
கத்தையுள்ளவர்களானார்கள், நாவைப்பார்த்தவர்கள் பாதஷாகளுக்
குப்போய்த்தூது சொல்லப்பட்டவர்களானார்கள், தொண்டையை
பார்த்தவர்கள் நல்லஅறிவானவாயிசும் பாங்குஞ்சொல்லப்பட்டவ
ர்களானார்கள், நாடியைப் பார்த்தவர்கள்பிசபில்வெட்டப்பட்டவர்
களானார்கள், பிடரியைப்பார்த்தவர்கள் வருத்தக்காரர்களானார்கள்
இரண்டு தோள்களைப் பார்த்தவர்கள் கத்திவெட்டும் அம்புகுத்துக்
காரர்களுமானார்கள்- வலதுதோளைப்பார்த்தவர்கள்அமட்டர்களும்
இடதுதோளைப் பார்த்தவர்கள்பாதஷாக்களுடைய உக்கும்படிக்கு
வெட்டப் பட்டவர்களுமானார்கள்வலதுஉள்ளங்கையைப் பார்த்தவ
ர்கள் பணங்கள்எண்ணப்பட்ட ஷிராபுகளும் இடதுஉள்ளங்கையை
ப்பார்த்தவர்கள் அளக்க நிறுக்கப்பட்டவர்களுமானார்கள், இரண்டு
உள்ளங்கைகளையும் பார்த்தவர்கள் - கசாவத்தாளிகளும் சகல அலு
வல்களுஞ் செய்யப்பட்டவர்களுமானார்கள், இரண்டுபுறங்கைகளை
யும்பார்த்தவர்கள் இரக்கமில்லாதபகீலர்களானார்கள், வலதுகைவிர
ல்களைப்பார்த்தவர்கள் தையக்காரர்களுமானார்கள்- நெஞ்சைப்பார்
த்தவர்கள் ஆலிம்களும் இமாம்களாகிய முஜ்த்தகிதுகளுமானார்
கள், முதுகைப்பார்த்தவர்கள் தாழ்மையுள்ளவர்களும் ஷிறக்கு உ
ள்பட்டவர்களுமானார்கள்- - விலாப்பக்கத்தைப் பார்த்தவர்கள்அல்
லாக்காகச் சண்டைசெய்யப் பட்டவர்களானார்கள், வயற்றைப்பா
ர்த்தவர்கள் அல்லாகுத்த ஆலாக் கொடுத்தமட்டும் போதுமென்கிற
பொசிப்புள்ளவர்களும் உலகத்தாசையைநீக்கப்பட்ட வர்களுமானா
ர்கள்- முழங்கால்களைப் பார்த்தவர்கள் ருக்கூவும் சுஜூதும் செய்

ப்பட்டவர்களானார்கள் - கால்படங்களைப் பார்த்தவர்கள்வேட்டை
க்காரர்களானார்கள், உள்ளங்கால்களைப்பார்த்தவர்கள் மிகுதியாநட
க்கப்பட்டவர்களானார்கள் - குதிக்காலைப் பார்த்தவர்கள் - சித்தார்
மேளம் முதலானவையின் கொட்டு முழக்கமுள்ளவர்களானார்கள்,
அவனைத்திரும்பிப்பார்க்கா திருந்தவர்கள் - எகூதி - நஸ்ரானிமுத
லானகாபர்களும் ஆண்மையுமுள்ளவர்களுமானார்கள் இப்படிதா
சாயகுல்அக்பாரில சொலலிவருகிறது.

நாறநாமா கிதாபில சொலலப் படுகிறது ஒருநாள் சிபு
னாயீல அலைஹிஸ்ஸலாம் சர்வரோ ஆலம்நபி சலலலலாகு அலேகி
வசலலமிடத்திற்கு வஹிக்கொண்டுவந்தார் அன்றையத்தினம்சர்
வரோ ஆலம் நபிசலலலலாகு அலைகிவசலலம் பீவிபாத்திமாநாய
கத்தினுடைய வீட்டிலிருந்தார்கள் - அப்போதுசிபுறாயீல் அலை
கிஸ்ஸலாம் பீவிபாத்திமா உடைய வீட்டின் வாசப்படியிலநிற்கிற
சமயத்தில பீவிபாத்திமா வாரும் சிச்சாபாவா அஸ்ஸலாமோ அ
லைக்கருமென்று சலாஞ்சொன்னார்கள், அதற்குசிபுறாயீல அலகிஸ
சலாம்யாதொன்றுஞ்சொலலாமல சும்மாயிருந்தார் அதைபீவிபா
த்திமாகண்டு நான் உனக்குச்சொலலியசலாத்துக்கு நீர்மிருதி சொ
ல்லுவது உன்பேரிலவாசிபாயிருக்க நீர்என் சவாபு சொலல யிலலை
என்றுகேட்டார்கள் - அதற்கு சிபுறாயீலஅலைகியிஸ்ஸலாம் ஜவாபு
சொன்னார்நான் உன்தகப்பனுருக்கும் வயதிலமூததுஇருப்பேன்
என்னை நீவாரும்சிச்சாவென்று அழைத்தபடியால நான் சும்மாயி
ருந்து விட்டேனென்று சொலல, அதை- பீவிபாத்திமாக்கேட்டு
நான் இந்தவிசனத்தை எனதகப்பனுருக்குப் போய்த்தெரியப்படு
த்துகிறேனென்று சொல்லி நிற்கிறசமயத்தில் சர்வரே ஆலம் நபி
சல்லல்லாகூஅலேகிவசல்லம் அங்கேவந்தார்கள்- அப்போது இந்த
சங்கதிகளெல்லாம் தன்தகப்பனுருடன் சொன்னார்கள் அதுகேட்
டுநபிசல்லல்லாகூ அலேகிவசல்லம்சிபுறாயீல் அலைஸ்சலாத்தைப்
பார்த்து உனக்குஎன்ன அதிச்சியந்தெரியுமென்றார் - அதற்கு சிபு
றாயீல் அலைஹிஸ்சலாம் நானொரு அதிச்சயங்கண்டதுண்டு மென்
றுசொன்னார் - அவ்வதிச்சயம் என்னவென்றுகேட்க வடபுறமா
ஒரு நக்ஷத்திரம் கிளம்புகிறதுண்டு அந்நக்ஷத்திரம் - எழுபதினா
யிரவருஷம் கிளம்பி பாடுசாயாம் லிருக்கும் பின்பு எழுபதினா
யிரவருஷம்மறைந்துபோகும் இப்படிஎழுபதினா யிரந்தரங்கண்டே
னென்றுசொன்னார் - அதைக்கேட்டு நபிசல்லல்லாகூ அலைகிவசல்ல
ம் தங்கள்தலையைதிறந்துகாண்பித்தார், அதைசிபுறாயீல் அலைகிஸ்
சலாங்கண்டார், அந்நக்ஷத்திரம் அவருடைய தலைஉச்சியிலிருந்
து இறங்கிக்கொண்டிருந்தது அதைக்கட்டிஅணைத்து முத்தமிட்
டுக்கொண்டு நபிசல்லல்லாகூ அலைகிவசல்லத்தைக் கேட்டார், இத
ற்கு மூன்று அடையாளமிருந்தது, அதைக்காணமென்றார் அதற்

றுநபிசல்லல்லாகு அலைகிவசல்லம் என்ன அடையாளமிருந்தது
அதைச் சொல்லென்றுகேட்டார் அதற்குசிபுறாயீல் அலைகிஸ்ச
லாம்சொன்னார் அந்த நக்ஷத்திரத்தினுடையதலையில் தாகும்இரண்
டுகாதில் இரண்டுமுத்தும் கழுத்தில்பதக்கமு மிருந்தது அதைகார
ணமென்றார் அதைக்கேட்டுநபிசல்லல்லாகு அலைகிவசல்லம் தலை
யிலிருந்த - தாக - அலியாரென்றும் இரண்டு காதிலிருந்தமுத்துகள்
இமாமெஅசென் - இமாமெஉசேன்என்றும் கழுத்திலிருந்தபதக்க
ம் பீவிபாத்திமாவென்றும் சொன்னார்கள் அதைக்கேட்டு சிபுறா
யீல் அலைகிஸ்ஸலாம் மிகவும்தாசீமைச்செய்தார் அப்போதுசர்வ
லோ ஆலம்நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சிபுறாயீல அலைஹி
ஸ்ஸலாத்துக்கு திருவுளமானார்கள், கேளும் சிபுறாயீலே அக்குப
காநுத்தாலா ஆதிமுதலஒளியினாலேபத்துக்கடலை யுண்டாக்கினான்
அப்பத்துக்கடலில, முதலாவது- அறிவென்னுங்கடல், உ-வது, நற்
செயலென்னுங்கடல, ௩-வது, ஆசையென்னுங்கடல, ௪-வது- கில
மென்னுங்கடல், ரு-வது-பயமென்னுங்கடல், ௬-வது- பொருமையெ
ன்னுங்கடல, எ-வது-இஷ்க்கென்னுங்கடல, அ-வது கியானமென்னு
ங்கடல, ௯-வது-எழுமைத்தனமென்னுங்கடல, ய-வது- புத்மையெ
ன்னுங்கடல- இப்படி பத்துக்கடலையுண்டாக்கி ஒவ்வொருகடலில
அந்தஒளிவு அஞ்சதினாயிர வருஷம் சுஜூது செய்துக்கொண்டிரு
ந்தது,இப்படி அவ்வொளிகடல்களிலிருந்துவணங்கிஅக்கடலை விட்
டுவெளியேவந்தது, அப்போதுஅல்லாகுபகாநுத்த ஆலாவின்குத
ரத்தினால அவ்வொளிவு உடலை அசைத்தது, அதிலிருந்து லக்ஷத்தி
ருபத்து நாலாயிரத் துளிகள் விழுந்தது, அத்துளி ஒவ்வொன்று
க்கு ஒவ்வொருநபிமார்களுமானார்கள்,மறுபடியும், உ வது, திரம்உட
லைஅசைத்தது அதில்விழுந்ததுளிகளினால் மலக்குகளானார்கள், அத
ன்பின்பு அந்த ஒளியின் உச்சியிலிருந்து மூன்னூற்றுப்பதின்மூன்
றுதுளிவிழுந்தது அதில்மூன்னூற்றுப்பதின்மூன்று முறுசல்நபிமா
ர்களானார்கள் நெற்றியிலிருந்து ஒருதுளிவிழுந்தது அதில் அர
சைப்படைத்தான் அதனுடையவதிப்பமும் பெருப்பமும் எப்
படிபோல் கொத்தமேபானால் அல்லாகுத்தஆலா அரசினுடைய
வாசற்படியின்மேல் பலகையில்கலிமாவையெழுதும்படியாய் கலத்
துக்கு உத்தரவுகொடுத்தான் அப்படியே அந்த கலம்முதல் லாயி
லாஹாயில்லல்லாகு முகம்மதுர்ரசூலுல்லாஹி என்றெழுதினது
அதையெழுத நாலாயிரவருஷம் சென்றது ஒருரிவாயத்தில் சொல்ல
ப்பட்டிருது அந்தகலம் லாயிலாஹா இல்லல்லாகுவரைக்கும் எழு
தியாசப்பின் ஆலமீனே நீ ஒப்புஉவமையில்லாதவனாய் இருக்கிறா
ய் உன்பேரினுடையக்கூட முகம்மதென்கிற மனுக்கான் பேரை
யெழுதச்சொன்னாயே அவர்யாரென்றுகேட்டது அதற்கு அல்லா
குத்தஆலா திருவுளமானான் இதால்அவனுடையமக்பூலான நபியுடை

கபேரொன்கிறதாய் சத்தமுண்டாய் அதை நீ எழுதென்றுஉத்திர வாச்சுது, அந்தஉத்திரவானஉடனே அந்தகலம் அவனுக்குபயந்து அதனுடைய நுனியிரண்டாவெடித்து முகம்மதுர் ரசூலல்லாஹு என்றெழுதினது, இந்தகலிமாவை அரசினுடைய வாசப்படியிலே யெழுதினபின்பு அல்லாகுத்தஆலா அந்த அரசுக்கும் பதினெண்ணா யிரம் புரிசையுண்டாக்கினான் அந்த ஒவ்வொரு புரிசையில் பதி னெண்ணாயிரம் பதினெண்ணாயிரம் தூண்கள் நிறுத்தாட்டினான் அவ் வொரு தூணுக்கு பதினெண்ணாயிரம் பதினெண்ணாயிரம் கங்கோருக்கள்செய்தான், ஒவ்வொரு கங்கோருக்கு இடையில் எழுநூறு எழுநூறுவருஷத்து பயணமாம், ஒவ்வொரு கங்கோரு வுக்குமேல் (௰௲) (௰௲) கிந்தில்கள் செய்துவைத்தானே, அந்த ஒவ்வொரு கிந்தில்களுடைய பெருப்பம் எவ்வளவானால் ஒருகி ந்தீலுக்குள் எழுவானம்எழுபூமி இவையினிடையிலுள்ளவை அட க்கலையும் எடுத்துவைத்தால் அதில் எவ்வளவா யிருக்குமேயானால் மனிதருடைய் கைவிரலின் ஒருமோதிரம் பெரியமயிதானில்விழு ந்தால் எவ்வளவோ அவ்வளவாயிருக்கும், அப்படிக் கொத்தபெரு ப்பமுள்ள அரசையுண்டாக்கிஅதையெடுக்கும்படியாய் நாலுமலக் குகளையுண்டாக்கினான் அவர்களில்ஒருவருக்குமனிதனுடைய முகமு ம்ஒருவருக்கு புலியினுடையமுகமும் ஒருவருக்கு பசுவினுடைய முகமும்ஒருவருக்கு கழுகையினுடைய முகமுமாகச் செய்தான் அவர்களுடைய பெருப்பம் எவ்வளவானால் தலைகள் அரசினுங்கால் கள் எழுபூமிக்குங்கீழ் தக்தசருவிலும் ஆணிக்கொண் டிருக்கிறது, அவர்கள் நடக்கஒருஅடியெடுத்துவைத்தால் இடையிலெழாயிரவரு ஷத்துப் பயணமுண்டு அப்பேர்க்கொத்த பெருப்பமுள்ள அந்த நாலுமலக்கையும் அல்லாகுத்த ஆலா அரசைத்தூக்கி தோள்களில் வைத்துக்கொள்ளுங்களென்று உத்திரவுசெய்தான்.

வலது சுல்பாவிலிருந்து ஒருதுளி விழுந்தது அதில் தக்தை யுண்டாக்கினான், இடது சுல்பாவி லிருந்து ஒரு துளி விழுந்தது அதில்குருசி யுண்டாக்கினான். வலதுகன்னத்திலிருந்து ஒரு துளி விழுந்தது, அதில் கலத்தையும், இடதுகன்னத்தி லிருந்து ஒருது ளிவிழுந்தது அதில் லவ்மகபூலையுண்டாக்கினான், வலதுபுருவத்தி லிருந்து இரண்டுதுளி விழுந்தது அதில் ஒருதுளியில் பயித்தில் முகத்தீசும் காபத்துல்லாவையு முண்டாக்கினான், இடது புருவத் திலிருந்து இரண்டு துளிவிழுந்தது அதில் ஒருதுளியிலே பயித் தில் மஹமூரும் நபிமார்களுடைய அருவாகையும் படைத்தான், வலதுகண்ணிலிருந்து இரண்டு துளிவிழுந்தது அதில் ஒரு துளி யில் ஜிபுறாயிலும் இரண்டாந்துளியில் மீக்காயிலையும் படைத்தா ன், இடதுகண்ணிலிருந்து இரண்டுதுளிவிழுந்தது அதில்ஒருது ளியில்இசுறாபிலும் இரண்டாந்துளியில்இசுறாயிலையும்படைத்தான்.

வலதுகாதிலிருந்து எழுதுளி விழுந்தது அதில்ஏழுவானங்களையும் படைத்தான், அந்தவானத்தின் சங்கதியை ககசுல் அல்பியாவென்னும் கிதாபில் சொல்லப்படுகிறது அல்லா சுபகானுத்தஆலாகுருசியின்கீழே ஒருமுத்தை யுண்டாக்கினான், அதை ஒருரிவாயத்தில் மாணிக்கமென்றும் சொல்லுகிறார்கள், அதனுடைய நீளம் ௫௱ வருஷித்தடிபாடும்அகலம் ௫௱ வருஷித் தடிபாடுமுள்ளதாயிருந்தது, அதை அல்லாகுத்தஆலா தன்னுடைய குதரத்தான பார்வையைக்கொண்டு பார்த்தான் அது அவனுடையபெருமையாகியஅச்சத்தினால் பயந்துஉருகித் தண்ணீராய்ப்போச்சுது அதுவல்லாமல் இன்னம் நாலுகாற்றை யுண்டாக்கினான் அவையில் ஒன்று கீழ்காற்று ஒன்று மேல்காற்று ஒன்று தென்காற்று ஒன்று வடகாற்று இக்காற்றுகளைத் தண்ணீரினுடைய நாலுபக்கமும் வைத்து அதின்மேலவீசியடிக்கும் படியாக உத்திரவுசெய்தான், அப்படியே அந்தநாலுகாற்றும் வீசி தண்ணிரின் மேலடிக்கவும் அந்த தண்ணிரில் அலைகளுண்டாய் அந்த அலைகளினால் நுரைகளுண்டாய் அந்தநுரைகளில்சூடுண்டாய் அந்த சூட்டினால்புகையுண்டாய் அந்தபுகையானது அந்த தண்ணீருக்குமேலும் குருசிக்குக்கீழுமாய் நின்றது பின்பு அல்லாகுத்தஆலா அந்தப்புகையை பிளக்கும்படியாக உத்திரவுசெய்தான் - அப்படியேஅந்தப் புகையானது தானே பிளந்து ஏழுதுண்டாய் அவையில் ஒருதுண்டு தண்ணீரும் ஒருதுண்டுசெம்பும் ஒருதுண்டு இரும்பும் ஒருதுண்டு வெள்ளியும் ஒருதுண்டு பொன்னும் ஒருதுண்டு முத்தும் ஒருதுண்டு மாணிக்கமு மாச்சுது. அந்ததண்ணீரினால் முன்வானத்தையும் செம்பினால் இரண்டாம்வானத்தையும் இரும்பினால் மூன்றும்வானத்தையும் வெள்ளியினால் நாலாம்வானத்தையும் பொன்னினால் அஞ்சாம்வானத்தையும் முத்தினால் ஆறும்வானத்தையும் மாணிக்கத்தால் எழாம்வானத்தையும் உண்டாக்கினான், அந்த எழுவானமும் ஒவ்வொன்றினுடைய அகலம்-௫௱ வருஷித்தடிப்பாடும்- கனம் ௫௱ வருஷித்தடிப்பாடும், ஒவ்வொன்றுக்குஇடை-௫௱ வருஷித்தடிப்பாடுமாயிருக்குது, அதுகளில்மலக்குக ளிருக்கிறார்கள்.

இடதுகாதிலிருந்துஎழுதுளிவிழுந்தது, அதைக்கொண்டு எழுபூமியையுண்டாக்கினான், எவ்விதமேயானால் மேற்சொல்லியமாணிக்கமானதுஉருகிதண்ணீராய் அந்தத்தண்ணீர்மேல்நாலுகாற்றும் அடித்தபோதுண்டான நுரையில ஒரு எள்ளளவுசிவந்தமண்ணுண்டாச்சுது அந்தஎள்ளளவு மண்ணானது, அந்தநுரையிலஉதித்து வெளியானது எவ்விடமானால் இப்பகாபத்துல்லாயிருக்குதே அதேவிடமாயிருந்தது - அப்போது அல்லா குத்தஆலா சிபுறாயீல் - மீக்காயீல் - இசுறாபீல் - இசுறாயீல்- இவர்கள் நாலுபேரையும்- அந்த மண்ணினுடைய நாலு மூலைகளையும் இடித்து இழுக்கும்

படியாய் உத்திரவுசெய்தான் - அப்படியே அவர்கள் பிடித்திரு
த்தார்கள் - அது ஒரு எள்ளளவாயிருந்த பிறகு அந்தமண்ணானது விரி
ந்த பூலோகமுழுது மாச்சுது - இப்படியாகிய பூலோகம் தண்ணீ
ரின் மீனாயின்மே லிருக்கிறபடியினாலே அதை அசையாம லிருக்
கும்படியாய் பூமியைச்சுற்றிலும் கோஹகாபுமலையை பக்கசமாக
த்திரனிலுண்டாக்கி அது பூமியையணைத்துக்கொண் டிருக்கும்படி
யாய் நிறுத்தாட்டினான், அந்தமலையின் அணைப்பினுடைத்தினாலே இந்
தபூமி அசையாமலிருக்கிறது அந்த மலையினுடைய உயரம் - ௫௦௦-
வருஷித்தடிபாடும் அதனுடைய சுற்று சவுக்கம் (௨௫) வருஷித்தின்
பயணம் அதனுடைய நிறம் பசுமையுமாயிருக்கிறது, அந்த பசு
மையினுடைய சுடரானது இந்தமுன்வானத்தின்மேல்போய்ப் பா
ய்கிறபடியினாலே இந்தவானமும் பசுமைநிறமாய்த் தோற்றுகிறது
இன்னம் அந்தகோஹகாபுமலைக்கு அப்புறம் கஸ்தூரியினால் எழு
பூமியையும் அதுக்கு அப்புறம் கற்பூரத்தினால் எழு பூமியையும்-
அதுக்கு அப்புறம் எழுபதினாயிரம் சண்டாக்களையுண்டாக்கி நிறுத்
தாட்டினான், அந்த ஒவ்வொரு சண்டாவின் கீழே எழுபது எழுப
தினாயிர மலக்குக ளிருக்கிறார்கள் அந்த மலக்குகள் எந்நேரமும்
சுவமே ஆலம் நபிசல்லல்லாகூ அலேகிவசல்லமுடையகலிமாவின்
திக்கிர் செய்துக்கொண்டு அல்லாகுத்த ஆலாவுடைய நாட்டம் நீங்
காமலிருக்கிறார்கள் இன்னம் அந்தகொடிகளுக்கு அப்புறம் ஒருபா
ம்பையுண்டாக்கி வைத்திருக்கிறான் அதனுடையநீளம் இரண்டாயி
ரவருஷித்து அடிப்பா முள்ளது, அதுபூமி அடங்கலையும் சுற்றிக்
கொண்டிருக்கிறது இன்னம் இந்தபூமிக்குங்கீழே இதனோடு கூட்
டி எழுபூமியுண்டு அந்தகீழான எழாம்பூமியில் மலக்குகளும் - ஆ
றாம்பூமியில்இபுலீசும், அவனுடைய மக்களும், அஞ்சாம் பூமியில்
தேளுகளும், நாலாம்பூமியில்பாம்புகளும், மூன்றாம்பூமியில் ஊர்
வைகளும், இரண்டாம்பூமியில் பரிகளும், முதல்பூமியில் மனிதர்க
ளுமிருக்கிறார்கள், இன்னம் இதைசிலபேர்களிப்படியில்லை பூமிசவு
க்கத்திலேயே இருக்குமென்று சொல்லுகிறார்கள் - இன்னம் இந்தபூ
மியனைத்தையும் ஒரு பசுதன்னிரண்டு கொம்புக்கும் இடையில் சுமந்து
க்கொண் டிருக்கிறது இந்த இரண்டுக் கொம்பிலும் நாற்பதினாயிர
ங்கிளைகள் கிளைத்துக்கொண் டிருக்கிறது அவையில் ஒன்றுக்கொன்
றுயிடையில் ௫௦௦-வருஷித்துப் பயணமிருக்கிறது, அந்தபசு ஒரு
மீனின்முதுகின்மேலும் அந்தமீன் ஒரு தண்ணீரின்மேலு மிருக்கி
றதுகள், அந்த தண்ணீருடைய ஆழம் நாற்பதினாயிரவருஷித் தடி
ப்பாடிருக்கிறது, அந்தத்தண்ணீர்ஒருகாற்றின்மேலும்,அக்காற்றனொ
ருஇருளின்மேலும் அவ்விருள்நரகத்தின்மேலும், அந்நரகம்ஒருகல்
லின்மேலும்,அக்கலஒருமலக்கினுடையதலையின்மேலிருக்கிறதுகள்,
அம்மலக்கு அல்லாகுத்தஆலாவினுடையகுதறத்தின்மேலிருக்கிறார்.

வனுல மூக்கிலிருந்து எட்டு துளி விழுந்தது, அதில் எட்டு சு
வர்க்கத்தைப்படைத்தான் - அதில் முந்தின சுவர்க்கம் - தாருஜிஹ
லா - உ வது. சுவர்க்கம் தாருஸ்ஸலாம்-ங-வது-சுவர்க்கம்-மாவா-ச-வ
து சுவர்க்கம் குல்து-ரு-வது, சுவர்க்கம் நயீம்- சா வது, சுவர்க்கம் பிர
தவுஸ் - எ வது,சுவர்க்கம் அதன்-அ-வது, சுவர்க்கம்-கரூர் - இப்படி
எட்டுசுவர்க்கங்களுண்டு அந்தசுவர்க்கத்தின் அழகும் அதின்பெரு
மையும் எப்படியிருக்குமென்றால் அந்தசுவர்க்கத்தின்பூமி வெள்ளி
யினுலும் மணல்கள் பொன்னினுலும், செங்கல்கள் வெள்ளியினு
லும் அதில் உள்ள மரங்களின் வேறு தங்கத்தினுலும் மரங்கள்கோ
மேதகங்களாலும் இலைகள் மரகதத்தினுலும்பழங்கள்முத்துகளினு
லுமிருக்கின்றதுகள், அப்பழங்களுடைய ருசிகரமானது அப்பழ
த்தைத்தின்ருல்-சய-நாள்வரைக்குந் தொண்டையில் தித்திப்புமாரு
கிறதில்லை,அப்பழத்தைத்தின்னநாடினுல் அம்மரம் தாழுய்வளைந்து
அப்பழத்தை உரித்து வாயில்கொண்டு வந்து கொடுக்கும் அம்மர
த்தில் பறவைகளுமுண்டு, அப்பறவைகள் சிவந்தமாணிக்கத்தினுலும்
சிறகுகள்மரகதத்தினுலும் மூக்குகள்முத்தினுலும்இருக்கிறது அதை
தின்ன நாடினுல் தானே அறுப்பட்டு நெய்யில் பொரித்து வாயில்
கொண்டு வந்து கொடுக்கும் அதிலுள்ள பெண்களின் அழகு முகம்
பதினுலாம் பக்கத்தின் நிலவும் வெழுக்கிப் போகும், பல்களின் அழ
கில் சூரியன்வெழுக்கிப்போகும்- அவர்களுடைய பார்வைகீழ்ப்பார்
வையுள்ளவர்களின்னமவர்கள் தன்புருஷனுக்குத் தவிரவேறேயொ
ருவரைப்பார்ப்பதில்லை, அவர்களுடன்- உடல்செய்யில்-சய- நாள்
பிரிகிறதில்லை அவர்களின்மே லிட்டிருக்கிற ஆடையாபரணங்கள் வி
தவிதமானது இப்படி அழகினையுடைய சுவர்க்கத்தில் முந்தினசுவர்க்
கத்தின் வாசப்படியில் லாயிலாஹா யில்லல்லாகூ முகம்மதுர் ரசூ
லுல்லாகி என்றெழுதியிருக்கிறது அதினுள்நபிமாருகம் ஷிஹீதுகளு
ம் சகிகளும் இவர்களிருக்கும்படியான இடமாம் இரண்டாவது சுவ
ர்க்கத்தில் நல்லவிதமாக ஒலுவுச்செய்து ஆசையுடனே முறைபடிக்
கதித்துதொழப்பட்டவ ரிருக்குமிடமாம்-ங-வது- சுவர்க்கத்தில் மிரு
த்தயின்பத்துடனே சாகாவத்துசெய்யப்பட்டவர்க ளிருக்குமிடமா
ம்-ச-வது-சுவர்க்கத்தில் அல்லாருத்த ஆலா விலகலாக்கியதை தானும்
விலக்கிசெய்பவர்களை செய்யவேண்டாமென்று விலக்கியவன் செய்
யச்சொன்னதைத் தானும்செய்து செய்யாதவர்களையும் செய்யவை
ப்பவர்களிருக்குமிடமாம், ரு-வது-சுவர்க்கத்தில் ஷிஹவத்தையும் சுல்
மையும் விலக்கினவர்க ளிருக்குமிடமாம்-சா-வது- சுவர்க்கத்தில் மக்கத்
துக்குப்போய் அல்லாக்காக அஜ்ஜுசெய்தவர்க ளிருக்கு மிடமாம்-
எ-வது-சுவர்க்கத்தில் அல்லாக்காக ஜிகாதுசெய்யப்பட்டவர்களிருக்
குமிடமாம்- அ- வது- சுவர்க்கத்தில் அருமான செயலைக்கொண்டும்
பார்வையைக்கொண்டும் மற்ற கெடுதலையான செயலைக்கொண்டும்

தாருக்கினவரும் தாய்தகப்பன் மத்றுமுள்ள இனத்தாரை ஆதரிக்கப்
பட்டவர்களுமிருக்குமிடமாம்.

இடது மூக்கிலிருந்து எழுதுளிவிழுந்தது அதினால் எழு
நரகத்தைப்படைத்தான் அதில் முதலாவது நரகம் ஜஹிம்- ௨-வது-
நரகம் ஜஹன்னம்- ௩-வது- நரகம் ஸகர்-௪-வது- நரகம் லயின்து
௫-வது- நரகம் லழி, ௬-வது- நரகம் ஹாவியா- ௭-வது- நரகம் ஹுத்
துமா- இப்படிஎழுநரகங்களுண்டு, அவையின் கெடுதலையெப்படி யென்
றால் அந்தநரகத்தி னெருப்பானதைப்படைத்து அல்லாகுத்த ஆலா
ஆயிரம்வருஷம்வரைக்கும் ஊதப்படியாய் மலக்குகளுக்கு உத்திர
வுகொடுத்தான் அதேபடி யூதினார்கள், அதில் அந்நெருப்பு வெண்
மைநிறமானது, பின்பு ஆயிரவருஷம்ஊதினார்கள், அதினால் சிவந்த
நிறமானது பின்பு ஆயிரவருஷம் ஊதினார்கள் அதினால் இருண்டக
றுநிறமானது இந்தஎழுநரகத்துக்குங் கீழைவயலென்னும் ஓடைஒன்
றிருக்கிறது அந்த ஓடையின்கொடுமை யெப்படிகொத்ததேயானால்
இந்த எழுநரகமும்நாயனே நீ இந்தவயலென்னும்ஓடையின்வாடை
எங்கள்பேரில் வீசவொட்டாமல்காத்துக் கொள்ளென்று நாளொன்றுக்
கு எழுதரம் துவாகேழ்க்கின்றது ஒருநாள் நபிசல்லல்லாகூ அலைகி
வசல்லமும் சிபுறாயீலுமாக உட்கார்ந்துக்கொண்டிருக்கையில் பூமி
யும் வானமும் கிடுகிடென்று அதிர்ந்தது அந்த அதிர்தலையினால் நபி
சல்லல்லாகூ அலைகிவசல்லமுடையமனமும் பயந்து உடலுங்கலு
ங்கி முகத்தின்நிறமுங் குலைந்தது, அப்போதுசிபுறாயீல் அலைகிஸ்ஸ
லாம்சொன்னார் ஆதம் அலைகிஸ்ஸலாத்தைஉண்டாக்காததற்குமுன்நர
கத்தின் கரையிலிருந்து ஒருகல்லுருண்டுவுருண்டு அந்த நரகத்தின் உள்
ளேவிழுந்தது அது இன்றையதினம் நரகத்தின் கீழைபோய் விழுந்
தது அதினால் வானம் பூமியெல்லாம் அதிர்ந்துபோச்சுதென்றார் அ
ப்படி கொரமாகிய நரகங்களின் ஒவ்வொரு வாசப் படியில் நெரு
ப்பினாலே எழுபதினாயிரமலைகளுண்டு அந்த ஒவ்வொரு மலைகளைச்சு
த்தி எழுபதினாயிரங்காடுகளுண்டு ஒவ்வொரு காட்டுக்குள் நெருப்பி
னால் எழுபதினாயிரம் வீதிகளுண்டு ஒவ்வொருவீதியில் எழுபதினாயி
ரம் வீடுகளுண்டு ஒவ்வொருவீட்டுக்குள் எழுபதினாயிரம் வாசப்படி
களுண்டுஒவ்வொருவாசப்படிக்குள் எழுபதினாயிரம் பெட்டிகளுண்
டு ஒவ்வொரு பெட்டிக்குள் எழுபதினாயிரம் நெருப்பினால் இருப்பு
ச் சங்கிலிகளுண்டு ஒவ்வொரு சங்கிலிகளின் மோதிரம் எழுபதினாயி
ரம் விதங்களுண்டு ஒவ்வொரு சங்கிலி மோதிரத்தில் எழுபதினாயிர
ம்விதமான அசாபுகளுமுண்டு இன்னம் தண்ணீருமுண்டு அந்தத் தண்
ணீர்கள் எழுபதி னாயிரம் விதமுண்டு ஒவ்வொரு விதத் தண்ணீரில்
எழுபதி னாயிரம் வித கொதிப்புக ளுண்டு ஒவ்வொரு கொதிப்பில்
எழுபதினாயிரம் அசாபுகளுண்டு ஒவ்வொரு அசாபில் எழுபதினாயி

ரம் கள்ளி மரங்களுண்டு ஒவ்வொரு கள்ளி மரத்தில் எழுபதினாயிர
விதமான பால்களுண்டு ஒவ்வொரு விதப்பால்களில் எழுபதினாயிர
விதப் பழங்களுண்டு ஒவ்வொரு பழத்தினுள் எழுபதினாயிர விதபா
ம்புந் தேள்களுங் குளவிகளுமுண்டு ஒவ்வொரு பாம்புக்கு எழுபதி
னாயிரவித அசாபுகளுண்டு ஒவ்வொரு குளவிக்கு எழுபதினாயிரவித
அசாபுகளுண்டு ஒவ்வொரு தேள்கள் கொட்டினால் எழுபதினாயிர
வருஷம் விஷமிறங்கிற தில்லை குளவிகள் கொட்டினாலு மிப்படியே
அந்தப்பாம்பின் விஷத்தில் ஒரு துளி பூமியில் விழுந்தால் பூமிவா
னமெல்லாம் வெந்து சாம்பலாய்ப் போகும் இவ்வித அசாபினையு
டைய நரகத்தின் ஆழமும் அகலமும் இவ்வள வென்று சொல்லக்
கூடாது முதல் நரகத்தில் குனுகபிருவாகிய பெரும்பாவமாகிய கு
ற்றத்தை தெரிந்துந்தெரியாமலும் செய்கின்ற இசுலாமானவர்களி
ருக்குமிடமாம, உ-வது நரகத்தில் காபர்களிருப்பிடமாம், ௩ - வது
நரகத்தில் யாருகு மாருகு கூட்டாத்தா ரிருக்கு மிடமாம், ச-வது
நரகத்தில் ஸயித்தான்க ளிருப்பிடமாம, ரு-வது நரகத்தில் தொ
ழுகை யில்லாதாரும் சக்காத்துக்கொடுக்காதாரும் நோன்பைபவை
யாதாரும் அச்சுசெய்யாதாரும் கயிர் கயிராத்து கொடுக்காதாரு
மிருக்குமிடமாம், சா - வது, நரகத்தில் எகூதிநஸ்ருனிமகுசி இப்
படிப்பட்டவர்களிருக்குமிடமாம்,எ-வதுநரகத்தில்முனாபிக்குமுஷ்ரி
க்கு இவர்களிருப்பிடமாம் இன்னம் கள்ளுசாராயம் அருந்தினவட்
டிக்குலபாதகம் இப்படி கெடுதலையாகியகுற்றவாளிகளிருப்பிடமாம்

நாவிலிருந்து ஒரு துளி விழுந்தது அதில் தஸ்பிக்கைப்படை
த்தான்-மோவாயிலிருந்து ஒரு துளி விழுந்தது அதில் ஆபஹாய
த்தைப்படைத்தான் - கழுத்திலிருந்து ஒருதுளி விழுந்தது அதில்
பிபிமரியத்தைப்படைத்தான் - பிடரியிலிருந்து ஆறுதுளி விழுந்
தது அதில்உஸல்லாசதயிமாளாப் படைத்தான், வலதுதோளிலிரு
ந்து இரண்டுதுளி விழுந்தது அதில் ஒருதுளியில்பொழுதும் மற்
றொரு துளியில் நிலவையும்படைத்தான் இடதுதோளி லிருந்து
இரண்டுதுளிவிழுந்தது அதில் ஒரு துளியில் இரவும் மற்றொருது
ளியில் பகலையும் படைத்தான் வலது புயத்திலிருந்து ஒரு துளிவி
ழுந்தது அதில் அவுபக்கர்சித்திகை படைத்தான் இடதுபுயத்திலி
ருந்து ஒருதுளிவிழுந்தது அதில் உமறைப்படைத்தான் மாரிலிரு
ந்து ஒரு துளிவிழுந்தது அதில் உதுமானைப்படைத்தான் முதுகிலி
ருந்து ஒருதுளிவிழுந்தது அதில்அலியாரைப்படைத்தான் நெஞ்சி
லிருந்து(ய) துளிவிழுந்தது அதில் முதல்துளியில் ஆரிபுகளும் இர
ண்டாந்துளியில் ஆபிதுகளும் மூன்றாந் துளியில் முத்தகின்களும்
நாலாந்துளியில் பக்கிரிகளும் அஞ்சாந்துளியில் ஆலிம்களும் ஆ
றாந்துளியில்ஆகிகளும் ஏழாந்துளியில் பிசபில்செய்யப்பட்டவர்
களும் எட்டாந்துளியில் ஹாபீஸ்களும் ஒன்பதாந்துளியில் சாலி

றாக்களும் பத்தாந்துளியில் தோபாச்செய்யப்பட்டவர்களும் படைத்தான், வலதுகையிலிருந்து பத்துதுளி விழுந்தது முதல் துளியில் சத்சத் என்னும் காற்றும் இரண்டாந் துளியில் தப்றப் என்னுங் காற்றும் மூன்றாந் துளியில் இடியும் நாலாந் துளியில் மின்னலும் அஞ்சாந் துளியில் சூலொன்னுங் குழலும் ஆறாந் துளியில் சுவர்க்கத்து கூறுணிகளும் ஏழாந் துளியில் சுவர்க்கத்துத்தோறிப் பெண்களும் எட்டாந்துளியில் சிதருத்துல் முன்தகா வென்னு மரமும் - ஒன்பதாந் துளியில் தூபா வென்னு மரமும், பத்தாந்துளியில் சுவர்க்கத்திலுள்ள மரங்களெல்லாம் படைத்தான் இடதுகையிலிருந்து பத்துதுளிவிழுந்தது - அதில் முதல் துளியில் தப்பரவானசாருயமும் இரண்டாந் துளியில்தேனும் மூன்றாந்துளியில்பாலும் நாலாந்துளியில் அவுசேக வுசலொன்னுங்குளமும் அஞ்சாந்துளியில் ஏழுசமுத்திரத்தின் தண்ணீரும் ஆறாந் துளியில் எழுபதினாயிர விதமான பூக்களும் ஏழாந்துளியில் எழுபதினாயிர விதமான ஆறுகளும், எட்டாந் துளியில் எழுபதினாயிர விதமான வாசனையும் ஒன்பதாந் துளியில் எழுபதி னாயிரவித முத்துக்கள் விளையும் சமுத்திரமும், பத்தாந்துளியில் எழுபதினாயிரவித ருசி காமும்படைத்தான்.

வலது முழங்கையிலிருந்து அஞ்சு துளி விழுந்தது முதல் துளியில் வெள்ளியும் இரண்டாந் துளியில்பொன்னும் மூன்றாந் துளியில் மூசா நபியுடைய ஆசாவும் - நாலாந் துளியில் சுலெயுமா நபியுடைய முத்திரை மோதிரமும், அஞ்சாந் துளியில் ஈசு நபியுடைய அழகையும் படைத்தான் இடது முழங்கையிலிருந்து அஞ்சுதுளிவிழுந்தது அதில்முதல்துளியில் இபுறாஹீம் நபியுடைய ஆடுகளும் இரண்டாந்துளியில் சுவர்க்கத்தின் குதிரைகளும் மூன்றாந்துளியில் பறவைகளும் நாலாந்துளியில் நாற்கால் செவன்களும் அஞ்சாந்துளியில் ஆதமும் அவ்வாவையும் படைத்தான், வலது முழங்காலிலிருந்து இரண்டு துளி விழுந்தது அதில் முதல் துளியில் கொத்தூசும் இரண்டாந்துளியில் றாக்கும் படைத்தான் இடது முழங்காலிலிருந்து இரண்டுதுளிவிழுந்தது அதில் முதல் துளியில் மீசானும் இரண்டாந்துளியில் சூரியன்காற்றும்படைத்தான், வலதுகண்டக்காலிலிருந்து ஒருதுளிவிழுந்தது அதில்கோஹாபுமலையும் அசபாத்துமலையுமுண்டாக்கினான் இடதுகண்டைக்காலிலிருந்து ஒருதுளி விழுந்தது அதில ஒருதுளியில புலசிறாத்தைப்படைத்தான் வலதுகுதிகாலிலிருந்து ஒருதுளிவிழுந்தது - அதில புர்ராகைப்படைத்தான்இடதுகுதிகாலிலிருந்து ஒருதுளிவிழுந்தது அதில்துலதுலைப்படைத்தான்.

இடுப்பி லிருந்து நாலு துளி விழுந்தது அதில ஒரு துளியில காற்றும் இரண்டாந்துளியில நெருப்பும் மூன்றாந் துளியில த

ணவிரும் நாலாத் துனியிலம்மன்னையும்படைத்தான் அப்போது
விருப்பவதுப்பருமுள்ள ஒளிவே யிந்த நாலுவஸ்துவையில் ஒவ்
வொன்றை தெரிந்து அந்த எடுத்துக்கொள் உன்னை துனியாவிலுண்டாக்
கி விளக்கஞ்செய்யவேண்டுமென்று திருவுளமானான்,அப்போது
ஒளிவோ ஆலம்நபிசல்லல்லாகு அலைகிவசல்ல முடையஒளிவு நெ
ருப்பண்டைபோய் அஸ்ஸலாமோ அலைக்கும் நெருப்பே என்
றது அதற்கு வஅலைக்கும்சலாம் நூறுமுகம்மதே யென்று நெரு
ப்புச்சொல்லினது பின்பு அந்நெருப்பை ஒளிவுபார்த்துநீயாரெ
ன்றுகேட்டது அதற்கு நெருப்பு சொல்லிற்று நான் அல்லாவுத்த
ஆலாவினுடைய படைப்பில் நாமொரு படைப்பென்றது அதைக்
கேட்டு ஒளிவுச்சொல்லும் நீ துனியாவி லென்ன காரியஞ்செய்
வாயென்றது நெருப்புச் சொல்லும் என்மனதில் நினைத்தபடியெ
ல்லாஞ் செய்வேனென்றது அதுகேட்டு ஒளிவுச்சொல்லும் படை
ப்புண்ட அடியானுக்கு ஒருமனதுண்டோ படைப்பாகிய அடி
யார்களுக்கு அப்பேஒளியே அப்பில்லாதவை யாதொன்றுமில்லை
அப்படியிருக்க உன்னிடத்தில் யாதொருஅப்புமில்லையோ வென்
றுகேட்டது அதற்குநெருப்புச்சொல்லினது என்னிடத்தில் யாதொ
ருஅப்புமில்லை அப்படியென்னிடத்தில் என்ற அப்பிருக்கிறதெ
ன்றது அதுகேட்டு நூறுமுகம்மது சொல்லினது உனக்கு அப்பா
னது இருக்கிறது உன்னையெழுப்புகிறது காற்று கொல்லுவது த
ண்ணீரென்றது அதைநெருப்புகேட்டு நூறுமுகம்மதே நீசொன்
னதெல்லாஞ் சரியேஉன்னிடத்தில்யாதொருஅப்புமில்லையோவெ
ன்றது ஒளிவுச்சொல்லும் அஸ்தகபிருல்லாஹா என்ன அப்படி
ச்சொல்லாதே நாமிருந்த அப்புள்ளவன் அப்பில்லாதவன் அரி
யபெரிய நாயனுகிய அல்லாகுத்த ஆலா ஒருவனே ஒழிய மற்ற
வையெல்லாம் அப்புள்ளதென்றுசொல்லி நெருப்பேநீ கலிமா
சொல்லென்றது உடனே நெருப்பு அஷ்ஹது அல்லாயிலாஹா இ
ல்லல்லாகு வஹுதகு லாஷரிகலகு வஷ்அது அன்னமுகம்மதன்
அப்துகு வறசூலகு என்றுகலிமாச்சொல்லி றசூலுக்கு ஈமான்கொ
ண்டுகபூல்செய்தது ஒளிவுக்கு மிகுந்த தாட்சிமையுஞ்செய்தது அத
ன்பின்பு ஒளிவுகாற்றண்டைபோய் அஸ்ஸலாமோ அலைக்கும் காற்
றே யென்றது அதற்கு வ அலைக்கும் சலாம் நூறு முகம்மதே
யென்று காற்றுச்சொல்லினது பின்பு காற்றைஒளிவுபார்த்து நீயா
ரென்று கேட்டது அதற்கு காற்று சொல்லிற்று நான் அல்லாகுத்த
ஆலாவினுடைய படைப்பில் நாமொரு படைப்பென்றது அதைக்
கேட்டு ஒளிவுசொல்லும் - நீதுனியாவி லென்னக்காரியஞ்செய்வா
யென்றது காற்றுச்சொல்லும் என்மனதில் நினைத்தபடி யெல்லா
ஞ்செய்வேனென்றது அதுகேட்டு ஒளிவுச்சொல்லும் படைப்பு
ண்ட அடியானுக்கு ஒருமனதுண்டோ - படைப்பாகிய அடியார்க

னுக்கு அய்பெழிய அய்பில்லாதவை யாதொன்று மில்லை அப்படி
யிருக்க உன்னிடத்தில் யாதொரு அய்பு மில்லை யோவென்று
கேட்டது அதற்கு காற்றுச் சொல்லினது என்னிடத்தில் யா
தொருஅய்பு மில்லை - அப்படி என்னிடத்தில் என்ன அய்பு இரு
க்கிறதென்றது அதுகேட்டு நூறுமுகம்மது சொல்லினது உனக்கு
அய்பானதிருக்கிறது அது என்னவென்றால் எல்லார் முகத்தையும்
நீகாண்பாய்-உன்முகத்தை யாருங் காணமாட்டார்க ளென்றது, அ
தைக்காற்றுக்கேட்டு நீசொன்னதுசரியே உன்னிடத்தில் யாதொரு
அய்புமில்லையேவென்றது ஒளிவுச் சொல்லும் அஸ்தக பிருல்லா
ஹா என்ன அப்படிசொல்லாதே நான்மிருந்த அய்புள்ளவன் அய்
பில்லாதவன் அரியபெரிய நாயனாகிய அல்லா சுபகானுத்த ஆலா
ஒருவனையொழிய மற்றவையெல்லாம் அய்புள்ள தென்றுச் சொலவி
காற்றே நீகவிமாச்சொல்லென்றது உடனேகாற்று அஷிஹது அன்
லாயிலாஹா இல்லல்லாஉ வஹுதஉலாஷிரிகலஉ வஷிஹது அன்
னமுகம்மதன் அப்தஉவ ரசூலகூ வென்றுகவிமாச்சொலவி நூறூலு
க்கு ஈமான்கொண்டு கபூல்செய்து ஒளிவுக்கு பிருந்ததாகதிமையு
ஞ்செய்துஅதன்பின்பு அவ்வொளிவு தண்ணீரண்டைப்போய் அ
ஸ்ஸலாமோ அலைக்குந்தண்ணீரேயென்றது அதற்கு வஅலைக்கும்ச
லாம் நூறுமுகம்மதேஎன்று தண்ணீர்சொல்லினது, பின்பு அந்தத
ண்ணீரை ஒளிவுபார்த்து நீயாரென்றுகேட்டது அதற்குத்தண்ணீர்
சொல்லிற்று நான் அல்லாகுத்த ஆலாவினுடைய படைப்பில நா
னொருபடைப்பென்றது அவைக்கேட்டு ஒளிவுச்சொல்லும் நீ து
னியாவிலே யென்னகாரியஞ் செய்வா யென்றது தண்ணீர் சொ
லலும் என்மனதில நினைத்த படியெல்லாஞ்செய்வேனென்றது அ
துகேட்டு ஒளிவு சொலலும் படைப்பாகிய அடியானுக்கு அய்
பெழிய அய்பில்லாதவை யாதொன்றுமில்லை அப்படி இருக்கஉன்
னிடத்தில் யாதொரு அய்புமில்லையோவென்று கேட்டது அதற்குத
ண்ணீர்சொல்லினது என்னிடத்தில் யாதொரு அய்புமில்லை அப்ப
டி. என்னிடத்தில் என்ன அய்பிருக்கிறதென்றது - அதுகேட்டு நூறு
முகம்மதுசொல்லினது உனக்கு அய்பான திருக்கிறது அதுஎன்ன
வென்றால்உன்னிடத்தில் நஜிசைக்கழுவுவார்கள் இன்னம் நீகட்டுப்பட்
டு உன்னிறமுமங்குலைந்து நாற்ற மெடுத்து புழுக்கள் விழுந்து பிருந்
த கெடுகெட்டுப் போவாயென்றது அதை தண்ணீர்கேட்டு நூறுமுக
ம்மதே நீ சொன்னதெல்லாஞ்சரியே உன்னிடத்தில் யாதொருஅய்
புமில்லையோ வென்றது ஒளிவுசொல்லும் அஸ்தகபிருல்லாஹா எ
ன்ன அப்படிச்சொல்லாதே நான்மிருந்த அய்புள்ளவன் அய்பில
லாதவன் அரியபெரிய நாயனாகிய அல்லாகுத்த ஆலாஒருவனை யொழிய
மற்றவை எல்லாம் அய்புள்ளதென்று சொல்லி தண்ணீரே நீ கவி
மாச்சொல்லென்றது உடனே தண்ணீர் அஷிஹது அன்லாயிலாஹா

யில்லல்லாகூவஹுதகூ லாஷரிகலகூ வஹிற்றது அன்ன முகம்மதன் அப்தகூவ றசூலகூ என்றகலிமாச்சொல்லிறசூலுக்கு ஈமான்கொண்டுகபூல்ச்செய்து ஒளிவுக்குமிருந்த தாகூிமையுஞ்செய்தது அதன்பின்பு அவ்வொளிவு மண்ணண்டைக்குப்போய் அல்லலாமோ அலைக்கும் மண்ணேயென்றது இதற்கு வஅலைக்கும் சலாம் நூறுமுகம்மதேயென்று மண்சொல்லினது - பின்பு அம்மண்ணை ஒளிவு பார்த்து நீயாரென்றுகேட்டது அதற்குமண்சொல்லிற்றுநான் அல்லாகுத்த ஆலாவினுடைய படைப்பில் நாமொரு படைப்பென்றது அதுகேட்டு ஒளிவுசொல்லும் நீதானியாவி லென்னகாரியஞ்செய்வாயென்றது அதற்கு மண் சொல்லிற்று நான் மிருந்த டின்லின் எல்லாப்படைப்புகளிலும் எளிமையுள்ளவன்- என்னால் ஒருவல்லமையுமில்லை நானியாதொன்றுஞ் செய்யப்பட்டவனுமல்லவென்று மிருந்ததாகூிமையுடன் அஷ்ஹது அன் லாயிலாஹ யில்லல்லாகூ வஹுதகூலா ஷரிகலகூ வஷ்ஹது அன்ன முகம்மதன் அப்தகூ வறசூலகூ என்றுகலிமாச்சொல்லி றசூலுக்கு ஈமான்கொண்டு ஒளிவுக்குமிருந்த தாகூிமைசெய்து நின்றது அதை நூறுமுகம்மதுவன்பிகேட்டியனைத்து இதேசகலத்துக்கும் ஆகுமென்றுதெளிந்துஎடுத்துக்கொண்டுபோய்விட்டது அதன்பின்புவெகுகாலத்திற்குப்பிறகு,

அல்லாகுத்தஆலா மலக்குகளுடனே யித்தஉலகத்தில் நாமொருகலிமாவை உண்டாக்குகிறோமென்றுசொன்னான் அதைஅந்தமலக்குகள்கேட்டு யா அல்லாகூ அந்த மனிதனையேன் உண்டாக்கிறாய் அந்தமனிதர்களால் பூலோகத்தில் சண்டைசாடிகள் வெட்டுகுத்துகள்முதலான அனேகக்கெடுதிகளாகும் நாங்கள்அடங்கலும் உன்னுடைய வணக்கங்களிலும் உன்னுடைய சிக்கிர் தசபிக்குகளிலும் உன்னுடைய ஏவலின் செயல்களிலும் தீங்குத லில்லாமல் பரிசுத்தமாகயிருக்கிறோமே போதாதா என்றுசொன்னார்களதற்கு அல்லாகுத்த ஆலா அந்தமனிதர்களுடையசேதியெனக்குத்தெரியுமேயல்லாமல் உங்களுக்குத்தெரியாதென்று சொன்னான் அதைக்கேட்டுஅந்த மலக்குகள் பேசாதிருந்துவிட்டார்கள் அப்போது அல்லாகுத்தஆலா முகம்மது நபிசல்லல்லாகூ அலைகிவசல்லமுடைய திருமேனியை உண்டாக்குவதற்காக ஜிபுறாயீல் அலைகிஸ்ஸலாத்தித்கு மதினத்திலுடைய மண்ணை எடுத்துக் கொண்டு வரும்படியாய்உத்திரவுசெய்தான் அப்படியே அவர் நபிசல்லல்லாகூ அலைகிவசல்லம் அடங்கியிருக்கிற இடத்து மண்ணை யெடுத்துக்கொண்டு போய் அதையும் நபியுல்லாவினுடைய ஒளிவையும் ஒன்றாய்க் கலந்து அதில் சுவர்க்கத்திலுள்ள தஸ்னீமென்கிற குளத்து தண்ணீர்வார்த்து இரண்டையும் நன்றாய்பிசைந்து அதைஒளிவான சரீரஉற்பத்திசெய்து சுவர்க்கத்திலுடைய அற்புதண்ணீரில் சிலதினம் அமுத்தி அமுர்த்திமுழுக்காட்டியெடுத்தார்.

அதன்பின்பு அல்லாகுத்த ஆலா அதை வானம் பூமிமுதலான இ
டங்களெங்குங்கொண்டுபோய் சகலமானபடைப்புகளுக்குங்காண
பிக்கும்படியாய் மலக்குகளுக்கு உத்திரவுசெய்தான் அதேபடிமலக்
குகள்முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய ஒளிவாகிய
மேனியை எங்குங்கொண்டுபோய் சகலமான படைப்புகளுக்குங்
காண்பித்தார்கள் அந்தபடைப்புகள் அடங்கலும் ஆதம்அலைகிஸ்ஸலா
முடைய மேனியைக்காணுகதற்கு முன்னமே பயகம்பர் சல்லல்லா
கு அலைகிவசல்லமுடையமேனியைக்கண்டுக்கொண்டதுகள் அதன்
பின்பு அல்லாகுத்தஆலா இந்த ஒளிவாகிய அமானத்தை ஒப்படிக்க
வேணுமென்கிறதாய் நாடி. அதைமலக்குகளுக்கு உத்திரவுசெய்தான்
அப்படியேமலக்குகள் நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமுடைய திரு
ஒளிவைதன்றாய்ச்சிங்காரித்து இந்தஅமானத்தை யாராகிலும் ஏற்று
க்கொள்ளுங்களென்று மயிதானில் வைத்துவிட்டார்கள் அப்போது
அந்தஒளிலே வானலோகப்பூலோகம் எங்குமுள்ளபடைப்புகள் அ
டங்கலும் பார்த்து இந்த அமானத்தை எடுக்க எங்களாலாகமாட்டா
தென்றுமிகவுந்தாழ்மையுடனே சொல்லிவிட்டதுகள் அதைஆதம்
அலைகிஸ்ஸலாமுடைய றாகானதுபார்த்து இந்த அமானத்தை நான்
ஏற்றுக்கொண்டேனென்றுசொல்லி மிகுந்தஇன்பத்துடனே ஏற்று
க்கொண்டார்.

அல்லாசுபகானுத்தஆலாபின்பு ஆதம்அலைகிஸ்ஸலாத்தையபடை
க்கவேணுமென்றுபூமியில்மண்ணையெடுத்துக்கொண்டுவரும்படியா
ய் முதல்சிபுறாயில் அலைகிஸ்ஸலாத்தை ஏவினான் அவனுடைய ஏவல்
படிக்கு அவர்பூலோகத்தில்இறங்கி இப்பகாயத்துல்லாயிருக்குதேஅ
வ்விடத்தில்வந்துநின்று பூமியில்மண்ணெடுக்கப்போனார் அதற்குபூ
மியானது கேளுப்சிபுறாயிலே அல்லாபேரில்ஆணையாக என்னிடத்
தில் மண்ணெடுக்காதேயும் எடுத்தால் என்மண்ணைக்கொண்டு அல்லா
வினுடைய கலீபாஉண்டாவார் அவுலாதுகள் மிகுந்த குற்றவாளிக
ளாய்அதனால்அவர்கள்பேரில் நரகத்தினுடையஅசாபுவாஜிபாக்கிப்
போகும்தான்மெத்தஎளுமையாகியகால் ஆகிஎனக்குஅல்லாகுத்தஆ
லாவினுடையஅசாபை சுமக்கஎவ்வளவும்வல்லமையில்லை ஆகையால்
என்னில்மண்ணெடுக்கவேண்டாமென்றுசொல்லினது அதைசிபுறா
யில் அலைகிஸ்ஸலாம் கேட்டு பேசாமல் போய்விட்டார் பின்பு மீக்
காயில் அலைகிஸ்ஸலாத்தை அனுப்பினான் அவருக்கும் அதே படி
ஆணையிட்டது அதைக் கேட்டு அவரும் பேசாமல் போய் விட்டார்
அதன்பின்பு இசுறாயில் அலைகிஸ்ஸலாத்தை அனுப்பினான் அவரு
க்கும் அதேபடி சொல்லி ஆணையிட்டது அவரும் போய் விட்டார்
பின்பு இசுறாயீல் அலைகிஸ்ஸலாத்தை அனுப்பினான் அவருக்கும் அ
தேபடி சொல்லி ஆணையிட்டது அதை அவர் கேட்டு நீயெவன்பே
ரில் ஆணை யிட்டாயோ அவன் என்னை அனுப்பி வைத்தான் அவன்

உத்திரவை நான் தட்டமாட்டேன் அவன் உத்திரவின்படி உன்னை எடுத்துக்கொண்டு போவேனென்றுசொல்லி சகல விடங்களுடைய மண்ணையும் ஒருபிடியாய்ச்சேர்த்து எடுத்துக்கொண்டு போய் அல்லாகுத்த ஆலாஉடனே யாஅல்லாகூ நீசொன்னபடிக்கு மண்ணையெடுத்துக்கொண்டு வந்தே னென்று சொன்னார் அதற்கு அல்லா குத்த ஆலா இந்த மண்ணைக் கொண்டு ஒரு கலிமா வுண்டாக்குவேன் அவருடைய அயாத்தை வாங்க உன்னையே கட்டளை செய்வே னென்றுசொல்லி இசுறாயீல் அலைகிஸ்ஸாத்துக்கு உத்திரவு செய்தான் அந்த மண்ணை மககத்துக்கும் தாய்பாவுக்கும் இடையில் வையென்றான் அப்படியே கொண்டுபோய் வைத்தார் அம்மண்மேல் அல்லாகுத்த ஆலாவினுடைய உத்திரவின் படிக்கு நஹமத்தானமழை பெய்ந்தது அந்த மழைத்தண்ணீரும் அந்தமண்ணும் கலந்து இரண்டுவருஷத்தில் பிசைவுதலாச்சுது அதற்குமேல் இரண்டுவருஷத்தில் குயவன் நன்றாக மிதித்து பிசைந்த மண்போ லாச்சுது அதற்குமே லிரண்டு வருஷத்தில் எனங்கள் பண்ணுகிற மண்ணு போல்நல்லபதமாச்சுது அதற்குமேல் இரண்டுவருஷத்தில் மனிதனுடைய உற்பத்தியாச்சுது இப்படி எட்டுவருஷத்திற்குள் உருபத்திஎல்லாம் பூரணமாய்முடிந்தது ஒருகவுலில் இரண்டுவருஷத்தில்ஆய் முடிந்ததாகச் சொல்லப்படுகிறது.

அப்படியிருக்கையில் ஒருநாள் இபலீசானவன் எழுபதினாயிர மலக்குகளோடு அவ்விடம்வந்தான் வந்து பார்க்கும்போது ஆதத்துடைய உடல் மண்ணின் மேல் விழுந்து கிடந்தது அதைப் பார்த்து இகழ்ச்சியாய்ப் பழிப்புச்செய்து விட்டுப்போனான் பின்பு ஒருநாள் அம்மலக்குகளுடனே அவிடம்வந்தான் அப்போது இபலீசை அம்மலக்குகள் இதுமன்னுதானு அல்லா உடைய கலீபாவானதென்றுகேட்டார்கள் அதற்குஅவன் இதுதானென்றுசொல்லி இந்தமனிதனை அல்லாகுத்தஆலா என்வசப்படுத்தினால் இவனை நான் மிகுந்தகெடுதல்செய்வேன் அல்லது என்னை இவன் வசப்படுத்தினால் நானிவன் வசமிருக்கமாட்டே னென்று சொன்னான் அதன்பின்பு ஆதம் அலைகிஸ்ஸலாத் துடைய உடலையும் உருப்புகளையும் பூரணமாச்செய்து முடித்தபின்பு முன்னால் ஆதம் அலைகிஸ்ஸலாமுடைய உயிரானது எந்துக்கொண்ட அமானமாகிய நபிசல்லல்லாகூ அலைகிவசல்லமுடைய ஒளிவே ஆதமுடைய வெளியுடலின்நெற்றியில் அல்லாகுத்த ஆலாவினுடைய உத்தரவின்படிக்கு சிபுறாயீல் அலைகிஸ்ஸலாம் அழுத்திவைத்துவிட்டார் அதினால் அவருக்குமிகுதியான அழகாச்சுது இப்படி கசுசுல் அம்பியாவில் சொல்லப்படுகிறது.

ஆதம் அலைகிஸ்ஸலாமுடைய உடல்பூரணமாய் உருப்பத்தியான நாற்பது நாளைக்குபின்பு அந்தஉடலில் அவருடைய உயிரானிடும்படியாய் சிபுறாயீல்மீக்காயீல் இசுறாபீல் இசுறாயீல் இவர்களு

க்கு அல்லாகுத்த ஆலாவினுடைய உத்திரவாச்சது அவ்வுத்திரவி ன்படிக்கு அந்நாலவரும் ஒவ்வொருவர் கூட (எய்த - எய்த) மலக்குகளை அழைத்துக்கொண்டு ஆதம்அலைகிஸ்ஸலாமுடையவுயிரை ஒளிவான ஒருதட்டில்வைத்து அதை ஒளிவானதஸ்தரினால் மூடியெடுத்துக்கொண்டு வந்து அந்தஉடலின் தலையின்மேல் வைத்து மூடிருந்ததை திறந்து விட்டார்கள் இன்னம் எழுவானத்திலுள்ளமலக்குகளெல்லாம் அந்தஉயிரானது ஆதத்துடைய உடலின்ளினமாய்புகுதகிறதோபார்க்கலாமென்றுவந்தார்கள் அப்போது அல்லாகுத்த ஆலாவினுடைய ஒருசத்தம் வந்து உயிரே இவ்வுடலுக்குள்புகுமென்ற அந்தச்சத்தத்தை உயிரானதுகேட்டு அதுஅந்தவுடலை எழுதரம்சுத்திவந்து யாஅல்லாகுதான் ஒளிவானவஸ்துவாயிருக்கிறேன் இந்த வுடலானது இருண்டதாகவும் அருக்களிப்புள்ளதாயிருக்குதேஇதற்குள்ளேநானென்னமாய்புகுதுவே னென்றுச்சொல்லிற்று பின்புஅல்லாகுத்த ஆலாவினுடைய ஒருசத்தமுண்டாச்சுது அவ்ஆதத்துடையஉயிரே அந்த உடலுக்குள் அறவறுப்பாகவேபுகுந்து அறுவறுப்பாகவே வந்துவிடென்று சொன்னான் அதைக்கேட்டு அந்த துப்பறவாகியஉயிரானதுஉடனே அந்தஉடலுக்குள் மூக்கின் வழியாகப்புகுந்ததுஇன்னம்உச்சந்தலைவழிபக்கமாய்புகுந்ததாகவும் சொல்லப்படுகுதுபுகுந்தஉயிரானது உச்சந்தலையை நகமுகமும் இரண்டுவருஷிவரைக்கும் சுத்திக்கொண்டேயிருந்தது பின்பு அந்த உயிர் கண்கள் வரைக்கும் பிரங்கி கண்களில் பார்வையுண்டாய் அப்பார்வை தன்சரீரத்தின் மேலோடிபார்க்கும்போது சரீரமெல்லா மண்ணாயிருந்தது அதன் பின்பு அவ்வுயிர் காதுவரைக்கும் பிறங்கி காதுகளில் கேழ்வியுண்டாய் அதனால் மலக்குகளுடைய தஸ்பீத் கேட்டுக் கொண்டிருந்தது அதன் பின்பு மூக்கின்தண்டுவரைக்குமிறங்கி மூக்கில் தும்மலுண்டாய் தும்பினது அதனால் உயிர்நன்றாய் குதிர்பாடாச்சுது இப்படி தகாயகுல் அக்பாரில் சொல்லப் படுகிறது கசசுல் அம்பியாவில் சொல்லப்படுகிறது உயிர் உடல் முழுதும் நிறைந்தபின்பு தும்பினதாகவும் அந்த மூக்கந்தண்டி லிருந்த நாருமார்பு வரைக்கு மிறங்கினது அப்போது ஆதம் அலைகிஸ்ஸலாம் அல்லாகுத்த ஆலாவினுடைய நாட்டத்தைக் கொண்டு இரு உள்ளங் கையையும் பூமியிலூன்றி எழுந்திருக்கப் போனார் எழக் கூடாமற் போச்சுது அதைமலக்குகள்கண்டு இன்னப்பாதி உடல் மண்ணாகவே யிருக்குது இதற்குள்ளே எழுந்திருக்கப் போகிறாரே ஆகையால் இந்த மனிதன் ஆத்திரக் காரனுவா னென்று சொன்னார்கள் இன்னம் அல்லாகுத்த ஆலாவும் மனிதன் ஆத்திரக்காரனென்று சொல்லி யிருக்கிறான் பின்பு அந்த நாருவயது வரைக்குமிறங்கி வயிற்றுக்குள் உள்

பண்ணயின் தேட்டற வாச்சுது பின்பு உயிர் உள்ளங்கால் வரைக்கு
மிறங்கி உடல்முழுதும் நிறைந்தது அப்போது சரீரத்தினுடைய
மண்ணெல்லாம் இரத்தமும் சதையும் எலும்பும் சவ்வும் தோல்க
ளுமாய்ப் போச்சுது அப்போது அவருக்கு உடுப்பாக சரீரமுழு
தும் நகமூடிக் கொண்டிருந்தது அதை அவர் ஒரு குற்றஞ்செய்
த படியினாலே நக உடுப்புகள் போய் அது அடையாளத்துக்காக
கைகால் விரல்களில்வைத்தான்

ஆதம் அலைகிஸ்ஸலாமுடைய சரீரத்தில் உயிரானது பூரண
மாய் நிறைந்தபின்பு அவருடைய நெற்றியில் முகம்மது நபிசல்ல
ல்லாகு அலைகிவசல்லமுடைய ஒளிவை யிறக்கினான் அது அவரு
டைய நெற்றியில் பதினல்பக்கத்து நிலவைபோலிருந்தது அதனு
டைய ஒளிவு அரசுவரைக்கும்போ யிலங்கிக் கொண்டிருந்தது அப்
போது அல்லாகுத்தஆலா மலக்குகளுக்கு சுவர்க்கத்தினுடைய ஒரு
சிம்மாதனம் கொண்டுவரும்படியாய் உத்திரவு செய்தான் அப்ப
டியே கொண்டுவந்தார்கள் அதனுடைய சவுக்கம் நாற்பது மயில்
அகல முள்ளது அதை பொன்னு தங்கம் நவரத்தினங்களால் சோ
டித்திருந்தது அதில் ஆதம் அலைகிஸ்ஸலாத்லைதஉயர்த்தியான சுவர்
க்கத்தினுடைய உடுப்புக ளுடுத்தி தலைக்கு முத்து மாணிக்கங்கள் ப
தித்ததாக தொப்பியும் வைத்து உட்கார்த்தி மருங்காக அபுமுகம்
மதே யென்று சொன்னான் - பின்பு அல்லாகுத்த ஆலா ஆதமே
உன்னுடைய தலையே மேலுக்கு உயர்த்திப் பாரென்றான் அதேப
டிபார்த்தார் அவருக்கு அரசுதெரியலாய் அந்தஅரசின் முந்தினதி
ரையில் ஒரு ஒளிவு யிருக்கக்கண்டார் அதைப்பார்த்து இவ்வொளிவு
யாருதென்றுகேட்டார் அதுக்கு அல்லாகுத்த ஆலா இது ஒருநபி
யுடைய ஒளிவு அவர்பேர்முகம்மது அவரை நானுண்டாக்காமல்
போனால் உன்னையும் வானம் பூமி மற்றவையாதொன்றையும் உண்
டாக்கப்போகிறதில்லை அவர்என்மகனுக பிறப்புதினாலே நான் உன்
னை அபுமுகம்மதே என்று மருங்காகக்கூப்பிட்டேன் என்றுசொன்
னான் பின்பு அல்லாகுத்தஆலா அசாசிலோடு மற்ற மலக்குகளையும்
கூட்டி தகியத்தெனும் சிசுதாச் செய்யும்படி உத்திரவு செய்தா
ன் அப்போது மலக்குகள் அல்லாகுத்த ஆலாவினுடைய உத்திர
வுபடிக்கு ஆதம் அலைகிஸ்ஸலாமுக்கு தகியத்து சிசுதாச் செய்தா
ர்கள் அசாசில் ஒருவனும் பெருமைத்தனமாய் சிசுதாச்செய்யாம
ல் மாறுபட்ட முன்கிராதின்றுன் மலக்குகளெல்லாம் சுருதாச்செ
ய்து தலையைத்தூக்கிப் பார்க்கும்போது அசாசிலொருவனும் சிசு
தாச்செய்யாமல் நின்று கொண்டிருந்ததைக் கண்டு இவன் இபுலீ
சு இவன்தான் சிசுதாச்செய்யவில்லை என்று அறிந்துக்கொண்டு மறு
படி யிரண்டாவது சிசுதாச் செய்தார்கள் அப்போது இந்த இபு
லீசை அல்லாகுத்தஆலா அடஇபுலீசே நான்இரண்டுகையினாலே உ

ண்டாக்கினேனே அந்த வஸ்துக்கு சுஜுதுச் செய்ய உனக்கு என்
நீங்குதலாச்சுது நீயிந்த ஆஸ்ஞைத்தனக்கு செய்கையே அப்படி
மருங்குலே நீ பெரியவனுமென்று கேட்டான் அதுக்கு இபுலீசா
னவன் என்னை நெருப்பி லுண்டாக்கினாய் அவனை மண்ணினாலுண்
டாக்கினாய் அதனால் நானவனுக்கு உயர்த்தியா யிருக்கிறேன் இ
ன்னம்நாளே உனக்குச் சுஜுதுச்செய்திருக்க வேறேஒருவனுக்குசுஜு
துச்செய்யேனென்று சொன்னான் அப்போது அல்லாகுத்த ஆலா
கோபமாய் நீஇவ்விடம்விட்டுநீங்கிப்போ உன்பேரில்கியாமத்துநா
ள்வரைக்கும் என்னுடையமுனிவாகிய லஹனத்தையிறக்கினேனெ
ன்று சொன்னான் அதுக்கு லஹனத்துப் பெற்ற ஷயித்தானானவ
ன் என்னுடைய நாயனே நீ என்னை நீக்குதலும் தள்ளுதலுஞ்செ
ய்த பிடிமையானது இந்த ஆதத்தைக்கொண்டு என்னுடைய பங்
கி லிருந்ததென்று சொன்னான் அதுக்கு அல்லாகுத்தஆலா நீமுன்
னுள்ளமுதிலவைத்திருக்கிறையே அதையோசித்துப்பாரென்றான் அப்ப
டியே அதை எடுத்துப்படித்துப்பார்த்தானென்னுடையநாயனே கியாமத்
துநாள்வரைக்கும் மவுத்தில்லாமல் படிக்கு நீண்ட அயாத்தைக்கொ
டு மனிதருடையசதைபிரத்தம்நரம்புகளில்புகுந்தப்படியாய்ச்செய்
அவர்களுடைய கண்ணுக்கு என்னை மறைப்பாக வையென்று கேட்
டான் அதுக்கு அல்லாகுத்த ஆலா அப்படியே கொடுத்தேனென்
றுசொன்னான் இதுகஸஸல் அன்பியாவிலுட்சகாயனுல் அக்பாரிலும்
சொல்லியிருக்கிறது

மலக்குகள் உதகம் அலைஹிஸ்ஸலாத்துக்கு தகிய்யத்து சுஜுது
செய்தான் பின்பு அவருக்காக அல்லாகுத்த ஆலா கஸ்தூரியினாலொ
ரு குதிரையையுண்டாக்கினான் அக்குதிரையின்பேர் - மைமூனு- அது
க்கு இருபக்கமும் முத்தினால் சிறகுகளிருந்தது அதின்மேல்ஆதம்அ
லைஹிஸ்ஸலாத்தை எற்றிக்கொண்டு பூலோகம் வானுலகெங்குமுள்ள
அதிசயங்களெல்லாம் காண்பிக்கும்படியாய்ச்சிபுறாயீல்இசுறாபீல்
இவர்கள் மூவருக்கும்உத்திரவுசெய்தான் அப்படியிம்மூன்றுபேரு
ம்ஆதம்அலைஹிஸ்ஸலாமிடத்துக்குவந்தார்கள் அவர்களை ஆதம்அலைஹி
ஸ்ஸலாம் கண்டு அஸ்ஸலாமோ அலைக்குமென்றுசொன்னார் அவர்கள்
வ அலைக்கும்சலாமென்றுசொன்னார்கள் அப்போது அல்லாகுத்த ஆ
லா ஆதத்துக்குச்சொன்னான் இதுகியாமத்துவரைக்கும் மூமினுகிய
பேர்களுக்குச்செய்யவும் சொல்லவுமிருக்கட்டுமென்றான் பின்புஆ
தம்அலைகிச்சலாத்தை அக்குதிரையின்மேலேற்றிச்சிபுறாயீல் அலை
ஹிச்சலாம்சடிவாளத்தைப்பிடித்துக்கொண்டு மற்றயிருவருமிருபக்க
மும்பிடித்துக்கொண்டு வானம் பூமியிவையிலுள்ள அதிசயமெல்லா
ங்காண்பித்துசுவர்க்கத்தில் ஆதம்தங்கியசிபுறாயீல் அலைகிச்சலாம்
கொண்டுவிட்டார் அப்போது ஆதம்அலைகிச்சலாத்துக்கு அல்லாகுத்
லாதோகா துப்பைக்கனிதவிரமற்றக்கனிவர்க்கமெல்லாம்தின்னஉத்தி

ரவுசெய்தான் அதேபடிதின்றுகொண்டு சந்தோஷமாயிருந்தார் அப்போது அவருக்குப்பக்கத்துணையில்லாதபடியினாலே அல்லாகுத்தஆலாஇவர் தூங்கும்போது இவருடையபக்கத்துவிலாவிலிருந்து ஹவ்அவ்வாலவையுண்டாக்கினான் அப்போது ஆதம்அலைகிச்சலாம் நித்திரைதெளிந்து எழுந்துபார்க்கும்போது தன்சிம்மாதனத்தில் தன்பக்கமாயிட்டநகையுடனேஹவ்வா உட்கார்ந்திருக்கக்கண்டு அவர்களைநீயாரென்றுகேட்டார் அதற்குஅவர்கள்நான்உன்பெண்சாதியென்றுசொன்னார்கள் அதை ஆதம் அலைகிச்சலாம்கேட்டுமிகுந்தஆசையாய்அவர்களைத்தீண்ட கையைநீட்டினார் அப்போதுஒருமலக்கு இட்டைநின்று பத்திரப்கைலையத்தீண்டாதேயென அதற்குஆதம்அலைகிச்சலாம் இவர்களைஎனக்காகஉண்டாக்கியிருக்கஎன்தொடாதையுமென்றீரென்றார் அதற்குமலக்குசொன்னார் இவர்கள்மகனைக்கொடுத்துத்தொடுமென அதற்குநான் என்னத்தைக்கொடுப்பேனென்றிருக்கையில் அல்லாகுத்தஆலாவினுடைய உத்திரவான துஆதமேநீர்முகம்மதுநபியேரில்(உ௰) சலவாத்துஓதிபக்ஷிஸ்செய்யும்அதேபடிஓதினார் அதைஹவ்அவ்வாகபூல்செய்துக்கொண்டார்கள்இருவருங்கூடி சுவர்க்கத்தில்சந்தோஷமாயிருந்தார்கள்.

இப்படிஇருவரும்சுவர்க்கத்தில்சந்தோஷமாயிருப்பதைஇபுலீசுக்கண்டுமனப்பொறுக்காமல் அவர்களைக்கெடுக்கவேணுமென்றுநாடிசுவர்க்கத்தின்வாசப்படியில் மூன்னூறுவருஷம்வரைக்கும் காத்துக்கொண்டிருந்தான்அப்போதுஒருமயில்வெளியில்வந்தது அம்மயிலைப்பார்த்து என்னைச்சுவர்க்கத்தில்கொண்டுவிடு உனக்கொருமந்திரம்கற்பித்துத்தாறேன்அதனால்நீமிகுந்தசுகம்பெறுவாயென்றான் அதுகேட்டு மயில்என்னாலாகாது சுவர்க்கத்தில்ஒருபாம்பிருக்குது அதினால்முடியும் அதைஅழைத்துவருகிறேன் அதனோடுசொல்லென்றுஅப்பாம்பைஅழைத்து வந்துவிட்டது அதைக்கண்டு அதற்கு உபசாரச்சொல்லுகளைச்சொல்லி என்னைச்சுவர்க்கத்தினுள்கொண்டுவிடுவென்றான் அதற்குப்பாம்பு எப்படிகொண்டுபோய்விடுவேன்மலக்குகள்காவலாயிருக்கிறார்களே என்றது அதற்குஇபுலீசானவன்உன்வாயைத்திற அதற்குள்புகுந்துக்கொள்ளுகிறேன் என்னைஉள்ளேகொண்டுவிடென்றான்அப்படியேஅந்தபாம்பு சுவர்க்கத்துள் இபுலீசைக்கொண்டுபோய்விட்டது அப்போதுஇபுலீசானவன் ஒருமூலையிலுட்கார்ந்துபுலம்பிபுலம்பிஅழுதான்அவனை ஆதமும் அவ்வாவும்கண்டுஏனழுகிறாயென்றார்கள் அதற்கவன்நானுங்களுக்காக அழுகிறகாரண மென்னவென நீங்கள் இந்தசுகமானசுவர்க்கத்தைவிட்டுமவுத்தாய்ப் போவீர்களென்றழுகிறேனென்றுமறைந்துபோனான்இதைக்கேட்டு யிருவருமனங்கலங்கியிருக்க ஆதம்அலைகிச்சலாத்துக்கு முன்பில்வந்து அந்தக்கோதும்பைக்கனியின்பிரயோசனத்தைச்சொல்லி அல்லாவின்பேரில்பொய்யாணையிட்டு நீங்கள்அந்தக்கோதும்பைக் கனியைத்தின்று

ஸ்மலக்குகள்போல என்றென்றுமவுத்தில்லாமலிருப்பீர்களென்றுஇப்
படிஎழுபதுதிரம்கலைந்துஇருவரையும் கோதும்பைக்கனியைத்தின்
னவைத்தான்.

அந்தப்பழம் ஆதம்அலைகிஸ்ஸலாத்தினுடைய வயற்றிற்போன
உடனே அவர் சரீரத்திலிருந்த உடைகளெல்லாந்தானேதானே கழன்
டுகீழேவிழுந்துப்போச்சுதுகள் அவர்தலையிலிருந்த தாசும் பறந்து
போய்விட்டது அவருடையஇடுப்பிலிருந்தபட்டுக்கலை சிபுறாயீல்
அலைகிச்சலாம்அவிழ்த்துவிட்டார்பின்னும்பீபீஅவ்வாவுடையஉடை
களும்கழன்டுபோய்விவர்களிருவரும்நிருவாணமாகிஓடிஓடிஒளிக்கப்
போனார்கள்அப்போது சுவர்க்கத்திலுள்ள மரங்களெல்லாம் இடங்
கொடாமல்விலகிப்போச்சுதுகள்அப்போதுஒருமரத்தினுடையகப்
பானதுஆதம்அலைகிஸ்ஸலாத்தினுடையதலைமயிரைசுழட்டிப்பிடித்து
க்கொண்டதுஅல்லாகுத்த ஆலாவைநாடிஇவ்வேளை நாநிருவாணியா
னேன்என்னைஇந்தமரமும் பிடித்துக்கொண்டதேஎன்றார்அதற்கு அ
ல்லாகுத்தஆலா திருவுளமானான் ஓஆதமே நான் தின்ன வேண்டா
மென்றகோதும்பைக் கனியைதின்றபடியினாலே உனக்கு இவ்வரு
த்தமெல்லாம் வந்துநேரிட்டது என்றான் அப்போது ஆதம் அலை
க்சலாம் மிகுந்த வெட்கமாய் மரங்களைஎல்லாம் கெஞ்சிக் கெஞ்
சி யிலைகேட்டார் எம்மரமும் இலைகொடாமல்போச்சுது அவ்வே
ளை சாம்பிறாணி மரம்இலைகொடுத்தது அதுக்கு.அல்லாகுத்த ஆலாஅ
வருக்கு நீஇலைகொடுத்தபடியினாலே உன்னுடைய சாம்பிறாணியை
யெல்லோருமெச்சிக் கொள்ளும்படியான வாசனையே கொடுத்தே
ன் ஆனால்என் உத்திரவில்லாமல் நீயிலைகொடுத்த படியால் உன்னைநெ
ருப்பில்போடும்படியாய்ச் செய்வேனென்றான்.

அதன்பின்பு அல்லாகுத்த ஆலாசிபுறாயீல் அலைகிச்சலாத்து
க்குஉத்திரவுகொடுத்தான் ஆதமும் அவ்வாவும் நான்வேண்டாமெ
ன்றகனியை அவர்தின்றபடியினாலே அவர்களிருக்க சுவர்க்கத்
தில் இடமில்லை அவர்களை துனியாவில் கொண்டுபோய் விடுமெ
ன்றுசிலமலக்குகளுக்கு ஆதத்துடைய தலைமயிரை மரம்பிடித்து
க்கொண்டதே அதைவிடுவித்து விடுங்க ளென்றும் உத்திரவான
து இதுசேதி ஆதமலைகிச் சலாத்துக்குத தெரியலாம் எனுடைய
னேஎன்னை உன் குதரத்தானகையினாலே படைத்து மலக்குகளினு
ல் தஜியத்தென்னும் சுஜூதும் செய்வித்தாயேஆனபடியினாலே என்
னை இச்சுவர்க்கத்தைவிட்டுபிரிக்காதே என்று மிகவும் புகழ்ந்தார்
அப்போது அல்லாகுத்த ஆலாமலக்குகளோடு சீக்கிரமாய்வெளிப்ப
டுத்துங்களென்று கண்டிப்பான உத்திரவுசெய்யஉடனே மலக்கு
கள் ஆதம் அலைகிச்சலாத்தினுடைய கையைப்பிடித்துவெளியே வா
ருமென்றுசொன்னார்கள் நான்வரமாட்டேனென்றார் உடனேமல
க்குகள் அவர்கையைப்பிடித்து வெளியேபோகலாம்வாருமென்று

யிழுத்தார்கள் அப்போது ஆலம் அலைகிஸ்ஸலாம் மரங்களைக் கட்டிகட்டி பிடிக்கவும் இவர்கள் விடாமலிழுக்க அப்போ ஆதம் என்னுடையனே என்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளென்று துவாகேட்டார் அதுஅப்போது கபூலாகயில்லை பின்னும்மலக்குகள் யிழுக்கதன்வயற்றில் பிறக்கும் நபிமார்களுக்காக என்பிழையைப்பொறுத்து இந்தசுவர்க்கத்தைவிட்டு வெளிப்படுத்தாதே என்றும் துவாகேட்டார் அந்நேரம் அந்ததுவாவும் கபூலாகவில்லை அப்போது ஆதம் அலைக்கிச்சலாம் நாயகனே எனக்கு முன்னால் தெரிவித்தாயே அந்த முகம்மது நபிசல்லல்லாகூ அலைகிவசல்லத்துக்காக பொறுத்துக்கொள்ளென்றார் அதை அந்த ஆலாகேட்டு மலக்குகளே என்று மேயாகிய முகம்மதை நினைத்தபடியால் இவனை.மெதுவாகவெளிப்படுத்துங்களென்று உத்திரவுசெய்தான்.

அப்போது ஆதம் அலைகிச்சலாம் சிபுறாயீல் அலைகிச்சலாத்தைப்பார்த்து என்னை எங்கேபோக அழைக்கிறீர் சொல்லுமென்றுகேட்டபோது சிபுறாயீல் அலைகிச்சலாம் சொன்னார் உன்னைஎங்கே படைத்தானோ அங்கே கொண்டுபோய் விட அழைக்கிறேனென்றார் அதற்கு ஆதநபிகேட்டார் உன்னை அங்கே கொண்டுபோய்விட்டு கடுக அழைத்துவருவீரோ அல்லது சிலநாள் அங்கிருக்கவிட்டு வருவீரோவென்றார் அதற்கு சிபுறாயீல் அலைகிச்சலாம் அதுசேதி எனக்குத் தெரியாது அல்லாகுத்தஆலாவுக்குத் தெரியுமென்றார் பின்பு அங்கே என்னிடத்தில் கூடயாரிருப்பாரென்றுகேட்டார் அதற்கு உன்னை எவன் கோதும்பைக்கனியைத்தின்னவைத்தானோ அவனிருப்பானென்றார் அதைக்கேட்டு ஆலம் நம்பன் பகையன் கூடஇருக்கலாச்சுதேஎன்று துயரப்பட்டார் - அப்போது அல்லாகுத்தஆலா-அல்சிபுரீயீலே நீ என் தாமிதஞ்செய்கிறாய் சீக்கிரமாய் வெளிப்படுத்தென்றான் - அதுகேட்டு சிபுறாயீல் அலைகிச்சலாம் ஆதமலைகிஸ்ஸலாத்தை சருந்தீவின் மலையிலும் கொண்டுவந்துவிட்டார் - அவ்வாவை ஜித்தாவிலும் இபுலீசை அயில்சிமையிலும் - பாம்பை அசபுகான் சிமையிலும் - மயிலைஅபுசிமையிலும் போய்விழும்படி எறிந்துவிட்டார்கள்.

இப்படி ஆதம் அலைகிஸ்ஸலாமே சிபுறாயீல் அலைகிஸ்ஸலாம் சருந்தீவில் கொண்டுவந்து விட்டுப்போனபின் ஆதம் அலைகிச்சலாம் தான்முன்னால் சுவர்க்கத்தில் இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்ததும் அப்போது இபுலீசானவன் கலைப்பில் அகப்பட்டு அல்லாகுத்தஆலாவினுடைய உத்தரவைதட்டி கோதும்பைக்கனியைத்தின்ற குற்றத்தையும் நினைத்து தன்னிரண்டு கண்ணிலிருந்து வெள்ளம்போல கண்ணீரோட இரவும் பகலும் அழுதது என்னுடையகுற்றத்தைப் பொறுத்துக்கொள்ளென்று கெஞ்சிக்கெஞ்சி அல்லாகுத்தஆலாவைக்கேட்டும் அவன் அக்குற்றத்தைப்பொ

றக்கவில்லை அதனால் ஆதம் அலைகிஸ்ஸலாம் இப்படிக்கேட்டுக்கெஞ்
சிக்கெஞ்சி அழுதுஅப்பொறுக்காவதைநினைத்து அழுதுக்கொண்டிருந்
தார் - இப்படிமுந்நூறு வருஷம் அழுதபின்பு ஆதம் அலைகிஸ்ஸலா
முக்கு முன்னால் அத்தஆலா தெரிவித்திருந்தானே அந்தசர்வரோ ஆ
லம்நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய ஒளிவின் பெருமையு
ம் அதின்மருந்து மிவர்மனதில்கியாபகம்வந்து இந்தஒளிவுக்கு அல்
லாகுத்தஆலா மிகுதியும் பெருமையைக் கொடுத்திருந்தானே இத
ன்பொருட்டாலாவது நம்முடைகுற்றத்தைப் பொறுத்துக்கொள்
ளுவானென்று நினைத்து-என்னுடையனே உன் கபியாகிய நபிசல்லல்
லாகு அலைகிவசல்லமுக்காக நான்செய்த குற்றத்தைப் பொறுத்து
என்னைக்காப்பாற்றிக்கொள்ளென்றுகேட்டார் - இந்தப்படிச்சொல்
லிக்கேட்டவுடனே அல்லாகுத்த ஆலாஉடனே ஆதம்அலைகிச்சலா
முக்குத்தெரிவித்தான் கேளும் ஆதமே நீஎன்கபியாகிய முகம்மதி
னுடைய பேரைச் சொல்லி என்குற்றத்தைப் பொறுத்துக்கொள்
ளென்று கேட்டதினாலே உன்குற்றத்தை நான் பொறுத்துக்கொ
ண்டேன் என்று திருவுளமானான்- பின்பு ஆதம் அலைகிஸ்ஸலாத்தை
யும் அவ்வாவையும் அல்லாகுத்த ஆலா ஜித்தாவிலிருக்கும்படியாச்
சேர்த்துவிட்டான்.

இப்படி ஆதமும் அவ்வாவும் ஒன்றாய்ச்சேர்ந்து சுகமாயிரு
க்கிறநாளையில் இருபதுசூலில் நாற்பதுபிள்ளைகளைப் பெற்றார்கள்
அதில் ஒருபிள்ளை சீசுநபிபிறந்தார்- அவர்பிள்ளையானுக அவருடை
யபிள்ளைகைனுன் அவருடையபிள்ளை மகுலீல் - அவருடைய பிள்
ளை எறுது - அவருடையபிள்ளை உகுநூகு- அவருடையபிள்ளை இது
ரீசுநபி - அவருடைபிள்ளை மத்துசல்கு - அவருடைய பிள்ளைலாம
க்கு - அவருடையபிள்ளை நூகுநபி அவருடையபிள்ளைஷாம்- அவரு
டையபிள்ளை அறுபாருசு அவருடைய பிள்ளைசாலகு - அவருடைய
பிள்ளை ஐபறு அவருடையபிள்ளை பாலகு அவருடைய பிள்ளைருகு
வா- அவருடையபிள்ளை சாறூகு- அவருடையபிள்ளைநாகூறு-அவரு
டையபிள்ளை ஆசறு அவருடையபிள்ளை இபுறாகீம்நபி- அவருடை
யபிள்ளை இசுமாயில்நபி- அவருடையபிள்ளை தாயித்துஅவருடைய
பிள்ளை எசுஜபு - அவருடையபிள்ளை அஃறுபு அவருடைபிள்ளை- த
யிருகு- அவருடையபிள்ளை நாகூறு - அவருடையபிள்ளை மிக்குவம்
அவருடையபிள்ளைஉதது அவருடையபிள்ளை அதநான்- அவருடை
யபிள்ளை முஅத்து - அவருடையபிள்ளை நிசார் - அவருடைய பின்
ளை மூலருநபி- அவருடை பிள்ளை இல்யாசநபி- அவருடைய பிள்ளை
முதரக்- அவருடைய பிள்ளை குசைமா- அவருடையபிள்ளை கனுனு
அவருடைய பிள்ளை நலரு- அவருடைய பிள்ளை லாமக்- அவருடை
யபிள்ளை பிஃறு- அவருடைய பிள்ளைகாலிபு - அவருடைய பிள்ளை
லுவை - அவருடைய பிள்ளைகஹுபு - அவருடைய பிள்ளை முறத்து

அவருடையபிள்ளை கிலாபு அவருடைய பிள்ளை குசை- அவருடைய
பிள்ளை அபுதுல் மூனாபு அவருடைய பிள்ளை அபுதுல் ஆஷிம்- அவ
ருடைய பிள்ளை அபுதுல்முத்தலிபு- அவருடையபிள்ளை அபுதுல்லா.

இப்படி நபிசல்லல்லாகு அலைகிவசல்ல முடைய ஒளிவு ஒ
வ்வொருவரிடமாக இறங்கி அவர்களுக்கு நபிபட்டமும் அரசுவாழ்
க்கையும் வாழ்வும் வரும்படியா யிலங்கி இறங்கிவந்து கடைசியில் அ
புதுல்லாவினுடைய நெத்தியிலிலங்கிக்கொண் டிருந்தது அதனால்
அனேகப்பெண்கள் இவருடைய அழகைக்கண்டு ஒருவருக் கொரு
வர் நான் நீயிவரை மணஞ்செய்துக் கொள்வேனென்று சண்டை
செய்துக்கொண்டிருந்தார்கள் அப்படியிருக்கிற நாளையில் அல்லா
சுபகானுத்தா ஆலாவின் கட்டளையின்படி பீபீ ஆமீனாவினுடைய
வயத்தில் அவ்வொளிவுதரிக்கும்படியாகச்செய்ததாள் றெச்சபுமாத
ம்முதல்தேதி வெள்ளிக்கிழமை யிரவு அபுதுல்லாவினுடைய நெற்
றியிலிருந்தவொளிவை பீபீ ஆமீனாவுடையவயற்றில் தரிப்பாடாக்
கிஅப்போது அல்லாசுபகானுத்த ஆலா மலக்குகளுக் குத்திரவுசெ
ய்தான் எட்டுசுவர்க்கத்தையுந்திறந்து அலங்கரித்து விடுங்கள்- நர
கத்தைமூடிவிடுங்கள் என்றான் அன்றைய இரவுபுத்துகளெல்லாம் த
லைகீழாய் விழுந்து போச்சுதுசஎ் இசுலீசினுடைய சிம்மாதன மு
ம் இராஜாக்களின் சிம்மாதனமும் பிரண்டு போனது இஸ்வஷீ
யித்தான்கள் வானத்தினிடம் போவதன்றி அதுவும் நின்றுபோன
து எழுவானின் பறவைகள் படுவானின் பறவைகளுக்கு இச்சேதி
யைதெரிவித்தன குறைஷிகளின் ஆடு மாடு குதிரை ஒட்டகங்கள்
அடங்கலும்இதுசேதியை எல்லவர்க்கும் தெரியும்படி வாய்திறந்து
சுத்தினதுகள் அக்காலம் பஞ்சகாலமாயிருந்தது அதுவும் தெளிந்
துபோயின மரங்களெல்லாம் தழைத்து பூத்துகாய்த்து பழங்கள்
சொரிந்தன அன்றையதினம் ஆமினா உடையமனையில் ஒருமனிதன்
வந்துஉன்வயற்றில் தரிபாடானது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல
மென்றுசொன்னார் இதுவல்லாமல்தரித்தனாள்முதல் பிறக்கும் நாள்
வரைக்கும்வானத்திலிருந்து உன்வயற்றில் தரிப்பாடான பிள்ளைமு
கம்மது அவர்மிகுந்த மருங்குள்ளவ ரென்று எந்நேரமும் இதே
சத்தமாயிருந்தது இந்த ஒன்பதுமாதம் வரைக்கும் பூலோகத்தில்
கெற்பிணியான பெண்பிள்ளைகளுக்கு உண்டாகும் அடையாளங்க
ளியாதொன்றும் பீபீ ஆமீனாவுக்குயில்லை கெற்பிணியாகிய இரண்
டாமாதம் அபுதுல்லாவும் இறந்துபோனார் அப்போது மலக்குகள்
அல்லாகுத்தஆலாவினிடம் நாயனே இந்தபிள்ளை எத்திமாய் போச்ச
தேயென அதற்கு அல்லாகுத்த ஆலா திருவுளமானான் அந்த பிள்
ளையினால் மிகுந்த புதுமைகளும் பூலோகத்தில் விளைவதல்லாமல் அ
தைக்குறித்து நீங்கள் துயரப்படவேண்டாம் அதைவளர்க்கவும்வா
ழ்வுகொடுக்கவும் நானிருக்கிறேன் அவர்பூமியில் பிறப்பதே மிகு

த்த அருமையென்று எண்ணுங்க ளென்றான் பின்பு ஆறுவது மாத
ம் பீபீ ஆமீனுவுடைய மனையில் ஒருவர்வந்து சொல்லினார் உன்வயி
ற்றில்தரித்திருக்கிற பிள்ளை இந்தபூலோகத்துக்கெல்லாம் பாதஷா
வானவர் அவர் பிறந்ததாலவருக்கு முகம்மதென்றுபேரிலவு மென்
றார் இப்படிநடந்ததின்பின்பு ஒன்பதாமாதத்தையில் தனியா ஆமி
னுவுக்கு பெற்பனவேதனையுண்டாச்சுது அந்தசமயத்தில் இருந்தாய்
போயிருந்து அந்தரமாய் ஒரு சத்த முழங்கினது அது சத்தம் என்
னமோவென் றிருக்கையில் ஒரு வெள்ளைப் பறவைவந்து ஆமீனுவு
டைய மார்பைத்தடவினது உடனே அவர்களுடைய பெறபவேத
னைநீங்கினது அந்தச்சமயத்தில் அப்துல் முத்தலிபு காபத்துல்லா
வுக்குப்போயிருந்தார் அவரும்வீட்டிலில்லாதவேளையில்யாரும்தமக்
குத் துணையில்லையே என்று ஆமீனுபயந்து தனித்து ஒன்றியாயிரு
ந்தார்கள் அப்படி யிருக்கிற வேளையில் ஆமீனுவுக்குத் தண்ணீர்தவ
னமாச்சுது அந்த தருணத்தில் ஒருவர்வெள்ளைக் கிண்ணத்தில் தண்
ணீர் கொண்டுவந்து கொடுத்தார் அதை வாங்கி பீபீ ஆமீனுகுடிக்
கவே தண்ணீர் தவனம் அடங்கிப் போனது அதன்பின்பு ஆமீனுவு
டைய உடலிலிருந்து ஒரு ஒளியானது வெளிப்பட்டது அந்த ஒளி
யிலிருந்து அப்துல்முத்தலிபு கிளையிலுள்ள பெண்கள்போல உயர
மான பெண்கள் ஆமீனுவை சூழ்ந் திருந்தார்கள் அப்போது
பீபீ ஆமீனு அதிசயப் பட்டு இவர்களுக்கு இந்தச் சேதி எப்
படி தெரிய லாச்சுது என்று கேட்ட போது அதற்கு அவர்கள்
சொன்னார்கள் நான் இமுறானுடைய மகள் என்பேர்மரியமென்று
ம் நான்பிரஉனுடைய பெண்சாதி என்பேர்ஆசியாவென்று இரு
பேருஞ்சொல்லி மற்ற இந்தப் பெண்க ளெல்லாம் கூறினியென்
றுசொன்னார்கள் அதன் பின்பு பீபீ ஆமீனுஉடைய காதில் என்னெ
ரமும்பூமியில் கல்லுமுதலியவை விழுந்தால் என்னமாய்சத்தம் வ
ருமோ அப்படி சத்தமுங்கேட்டுக் கொண்டே யிருந்தார் இன்னம்
மலக்குகள் வெள்ளைப் பட்டுடைக் கொண்டுவந்து ஆகாயத்துக்கும்
பூமிக்கும் இடையில்விரித்தார்கள் அப்போது அதிலொருவர் சொ
ன்னார் பிள்ளை பிறந்தவுடனே பிள்ளையை மனிதருடைய ஒருவர்க
ண்ணுக்கும் தெரியாம லேந்திக் கொள்ளுமென்றார் அவ்வேளையில்
சில பறவைக்கூட்டங்கள் வந்தது அப்பறவையில் மூக்கு மாகரத்தி
னமேலும் சிறகுகள் சிவப்பு மாணிக்கத்தா லிருந்தது அதுகள்பீபீ
ஆமீனுருடைய மடியை மறைத்துக் கொண்டதுகள் அப்போது
பீபீ ஆமீனுவுடைய கண்ணுக்கு மஷ்ரிக்குமேலே யிருந்து மகரிபுவ
ரைக்கும் இப்படி நாலு மூலையிலு முள்ளவை அடங்கலும் தன்று
ய்க் கண்ணுக்கு தெரியலாச்சுது அப்போது பார்வைக்கு மூன்று
பச்சைக்கொடி தெரியலாச்சுது அதில் ஒருபச்சைக்கொடி ஏழுவா

லிலும் ஒருபச்சைக்கொடி படுவானிலும் ஒருபச்சைக்கொடிக்கரு பத்துலாவின் பேரிலும் பிடித்துக் கொண்டு நிற்கக் கண்டார்கள் இப்படியோல் கொத்தவேளையில் முழுச்சந்திரனைப்போல கூறுணி களெல்லாம் சுத்திலும் நின்றுவாழ்த்தவும் ஒருமனிதன் வெய்யலில் கிடந்துவாடுங்காலத்தில் ஒரு குளிர்ந்தநிழலுடைய மரம்போலவும் மழையில்லாமல் பயிர்கள்வாடும் சமயத்தில் நல்லமழைபோலவும் கடலில் விழுந்து கரை யேற தடுமாறும் வேளையில் ஒரு கப்பல் அகப்பட்டாப் போலும் இருட்டுக்குப் பொழுதைப் போலும் நம்பள் நயினர் சர்வமோ ஆலம் நபிசல்லல்லாகூ அலைகி வசல்லம் பிறந்தார்கள்

தறாது.

அல்லாஉம்மாஸல்லி அலாசையதினாநபியினா

முகம்மதின்வஅலா ஆலேஸையதினா

முகம்மதின் வபாரிக்கவசல்லம்.

பூரணச் சந்திரனுக் கதிக மாகிய அழகினையுடைய நபிசல்ல ல்லாகூ அலேகி வசல்லத்தை பீபீ ஆமீனுபார்த்தார்கள் அப்போ து சர்வமோ ஆலம் நபிசல்லல்லாகூ அலேகிவசல்லம் தங்களுடைய இரண்டு கைகளின் கலிமா விரலை வானத்தின் புறமாய் உயர்த்திக் கொண்டு தலையை சுஜூதில் வைத்துக் கொண டிருந்தார்கள் அப் போது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமே பீபீ ஆமீனுர் கண்ணு க்குத்தெரியாமல்போம்படி ஒருவெள்ளைமேகந்தண்டு வந்துமூடி க் கொண்டது அந்த மேகத்துண்டி லிருந்து வொருசத்தம் வந்த து - அழகிய எனினுடைய கபீலைமனிதர் ஒருவரும் முதல் நீண்ட காகாது ஆனபடியினாலே இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டு ப்போய்-அரசு - குருசி-சொர்க்கம்-கடல்-மலை-பாதாளம்- ஏழுவான மும்ஏழுபூமியும் மற்றயிதுகளுக்குள்ள ஜின்மலக்குகள் பறவை ஜீர் வினம் நாற்காலியன் இவைகளுக் கெல்லாம் இப்பிள்ளை பூலோகத்தி லுர் தவிரிக்- குபரெல்லாம்நீக்கி அந்த ஆலாவுடைய ஒருமைபாட் டின் வழியை காண்பிக்கப்பட்டவரென்று எடுத்துக்கொண்டு போ ய்காண்பித்துவாருமென்று ஒருசத்தமுழங்கினது அதன் பின் அந் தமேகத்துண்டு விலகிப்போயினது அதன்பின் சர்வமோ ஆலம்நபி சல்லல்லாகு அலேகிவசல்லமுக்கு மேலே பச்சை பட்டுடையமெத் தைவிரித்து அதின்மேல்வெள்ளை சுவற்கத்தின் பறுத்தினுலேசுருட் டிவைத்திருந்தது இன்னம் அந்தப்பிள்ளையின் கைபிலுல் வெள்ளை

முத்திரைமேலொன்று திரிவுகோலிருந்தது அப்போது ஒருவர்சொல்லினார் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய கையிலிருக்குந்திரவுகோலில்ஒன்று வெற்றிப்பெறுவதுஒன்று காற்றினது ஒன்று அபுவித்தினது இம்மூன்று திரவுகோலையும் வாங்கிக்கொண்டாரென்று சொன்னார் - பின்பு ஒரு மேகத் துண்டு வந்தது அதில் குதிரையினுடைய கனைகனைப்புபோல ஒருசத்தமும் பறவையின் சிறையின்ஓசையைப்போல ஒருசத்தமும் மனிதருடைய பேச்சுபோல ஒருசத்தமும்வந்தது அம்மேகம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமைமூடிக்கொண்டது அதிலிருந்து ஒருசத்தம் வந்தது இந்தப்பிள்ளையையெடுத்துக்கொண்டுபோய் மனிதர் ஜின்கள் மலக்குகள்பறவைகள் - நாற்காலிகள் - ஊர்வைகள் இன்னம் மற்றுமுள்ள வைகளுக்கும் இவரைக்கொண்டுபோய் இவருடைய பேரைச் சொல்லி சகலத்துக்கும் தெரியப்படுத்துங்கள்பின்னும் அம்மேகத்திலிருந்து ஆதநபி யுடையகுணம் சிசுநபியுடைய அறிதலும் நூகுநபியுடைய சாமார்த்தியம் - இசுமாயீல்நபியுடையநாவும் - இசுஹாக்குநபியுடையருசித்தனமும் சாலஹுநபியுடைய சொல்திருத்தமும் லூத்துநபியுடைய-தந்திரமும் ஈசுபுநபியுடையஅழகும் மூசாநபியுடையவருத்தமும் அய்யூபுநபியுடையபொறுமையும் யூனுசுநபியுடையவணக்கமும் - யூஷ்ஆநபியுடைய பிசபிலும் - தாவூதுநபியுடைய ஓசையும் தானியால்நபியுடைய முகப்பத்தும் இல்யாசுநபியுடையமருங்கும் எஹியா நபியுடைய துப்பறவும் - ஈசாநபியுடைய தவ்வாவும் கொடும் - இன்னம் நபிமாருடைய குணங்களின் சமுத்திரத்தில் முழுகச்செய் திடுங்களென்று சொல்லி அம்மேகம் விலகிப்போனது அப்போது பீபீ ஆமீனுபார்க்கும்போது அந்தபிள்ளை யின்கையில் ஒருபட்டு உடைசுருட்டிவைத்துக் கொண்டிருந்தது அதில் தண்ணீரும் ஒழுகிக்கொண்டிருந்தது அப்போது ஒருவர் ஆ ஆ இந்தபிள்ளையானது பூலோகத்திலேவஸ்துவையெல்லாம் தன்கைவசமாக சுருட்டிப்பிடித்துக் கொண்டாரென்று சத்தம்வந்தது அப்போது பீபீ ஆமீனு நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடையமேனியிலிருந்து கஸ்தூரிவாசனைவீசவும் பதினாலாம்பக்கத்திலவுபோல முகமுமிலங்கக் கண்டார்கள் அவ்வேளையில் மூன்றுபேர்வந்தார்கள் அவர்களில் ஒருவர்கையில்வெள்ளிசெம்பும் ஒருவர்கையில் மரகதத்திலேல் தஷ்த்தும் ஒருவர்கையில் வெள்ளைப்பட்டுத்துணியுமிருந்தது அவர்கள்அந்தப்பிள்ளையையெடுத்து ஏழுவிரம்கழுவி மேனியைத்துடைத்து முகரோ நுபுவத்தையிரண்டுதோளினிடையில்பிடரியில்பதித்து அந்ததுணியினால் அக்முஹரதனையைச்சுருட்டிதன்னிறகில்ஒருமணிவரைக்கும் வைத்திருந்து பீபீ ஆமீனுகையில்கொடுத்துப்போய்விட்டார்கள்.

அதன்பின்பு அபுதல் முகலிபு சாபத் துல்லா வுக்குப்
போயிருந்தவிடத்தில் காபத்துல்லாவானது ருகாமேஇபுறுகிமெ
ன்றும்தலத்துக்கு நேராகதாஇழலையும் ஒன்றாய்சேர்ந்துசிசுதா
ச்செய்துஎழுந்து பின்னும்சபாத்துல்லாவானது இன்றோமேடஎ
ன்னை அல்லாகுத்த அலாயுத்துகளைக் கொண்டும் விருக்கைக்கொண்
டும்பரிசுத்தமாக்கிறன் என்றுசொன்னது அதை அபுதுல்முத்தலி
புகேட்டிருக்கும்போது இந்தகாபாவையிடமாக்கிக்கொண்டார் இ
தைவிட வாங்கிக்கொண்டார் இவிடத்தைபிரியஞ்செய்திருப்பார்
இன்றையஇரவு பீபீ ஆமினாவுடைய வயிற்றில் முகம்மதுநபி பிறந்
தார் அவருக்கு அல்லாகுத்தாலாவின் ரகம்மதென்னும்மேகமிறங்கு
மென்று சத்தம்வந்தது அந்திரவுசுற்றிலுமிருந்த கின்னபுத்துகளு
ம்குபல்என்னும் பெரியபுத்துக் குப்புறவிழுந்துபோனதுகள் - இ
ன்னம் கிஸ்ராராச்சியத்திலிருந்த மாடகூடங்களெல்லாமதிர்ந்து கோட்
டையின்பதினாலு புரிசையு மிடிந்துவிழுந்து அதினுள்ள புத்தக
ளும்மேழவுருண்டுவிட்டது சாவாவென்னும் ஏரிஎப்போதும்வற்
றாதத்தண்ணீர் குழியென்றுவற்றிப்போனது - சமாவென்னும்ஆறு
ஆயிர வருஷமாய்தண்ணீரில்லாமல் இருந்ததில்உடனே தண்ணீர் நி
றைந்துபோனது - பாரிசுக்காரர் ஆயிரவருஷமாய்வணங்கியநெருப்
புஉடனே அவிந்துபோச்சுது இபுலீசினுடையசிம்மாதனமும்க
விழ்ந்துபோனது பீபீ ஆமினாவுக்கு பெண்டுகளுக்காகும் தீட்டு
தொடக்குயாதொன்றுமில்லை நபிசல்லல்லாகு அலைகிவசல்ல முக்
கு தொப்புளும்அறுத்து சுன்னத்தும்செய்திருந்தது கண்ணுக்கு
சுருமாவுமிட்டிருந்தது தலையில்நெய்யும் தேய்த்திருந்தது அவர்பி
றந்தது சுருபந்துல்லாவுக்கு வடகிழக்காக சப்றதில் இஸ்தா வெ
ன்னுமிடத்தில் அபுத்தாலிபுடைய வீட்டில் நபியில் - அவ்வல்மா
தம் பனிரெண்டாந்தேதி திங்கள் கிழமைஇரவு பஜர்நேரத்தில்நபி
சல்லல்லாகு அலைகிவசல்லம் பிறந்தார் இன்னம் அவ்வூரிலிருந்த
சாஸ்திரவாதியாகியசுதி நன்றுணியிவர்களுக்கெல்லாம்நபிசல்லல்
லாகு அலைகிவசல்லம்பிறந்த அடையாளங்கள் தெரியவந்தது அ
வர்களுடைய கூட்டத்தார்களுக்கு இன்றைய இரவு முகம்மதுபிறந்
தாரென்றுதெரியப்படுத்தினார்கள்

அதன்பின்பு நபி சல்லல்லாகு அலைகிவசல்லமுக்கு பீபீ ஆ
மீனா ஏழுநாள்வரைக்கும் பால்கொடுத்தார்கள் அதன்பின்புசுவை
பா ஏழுநாள்வரைக்கும் பால்கொடுத்துக் கொண்டிருந்தார்கள்
அப்படிக் கொடுத்து வருகிற நாளையிலே சுனை னென்னும் ப
ட்டணத்தில் அலிமா வென்று ஒருவரிருந்தார்கள் அவர்களுக்கு
சரீரத்தில் சதையுமில்லை வலதுபக்கத்து மாருஞ்சுகையாயிருந்தது
இடதுபக்கத்துமார் கொஞ்சம் நல்லாயிருந்தது அவ்வூரில் அடா

பஞ்சம் வந்து - சீமை கலகமாய் அதினால் அலிமாவும் தன்புரு
ஷன் ஆரிசும்தன்பெரியபிள்ளை அபூதுல்லாவும் - சின்ன பிள்ளை சு
லுகத்தையும் ஒரு கிழ ஒட்டகையுமாய் மக்கத்து வந்து அங்
கே நபிசல்லல்லாகு அலைகிவசல்லத்தைக்கண்டு கட்டிஅணைத்துட
னே இவர்களுடையசரீரமும்பருத்து அழகுமாய் அந்தருலகிமாரு
ட்டிரண்டு அதிலுண்டானபாலை நபிசல்லல்லாது அலைகிவசல்லம் கு
டித்தார்கள் இடதுபக்கத்துபாலைசமுராத்தென்னும்பிள்ளை குடித்து
குடித்துகொம்பளிக்கும் இது அதிசயமெல்லாம் ஆரிசிம்அலிமாவு
ங்கண்டு மிகுந்தசந்தோஷமாய் சிலநாள்அங்கிருந்து பின்பு நபிசல்
லல்லாகு அலைகிவசல்லமை எடுத்து அந்தக்கிழஒட்டையின்பேரில்
எற்றவும் அதுவுந்திரண்டவடிவுள்ளதாய் நடக்கஅப்புறம் மனமகிழ்
சியால் வருகிறவழியிலிருக்கிற புல்பூண்டுமரம்கல்லுகள்முதலியவை
எல்லாம் சலாம்சொல்லும்பட்டுபோனமரமெல்லாந் தழைத்துபூத்
துகாய்த்துபழங்களுஞ்சொரிந்ததுகள்-இப்படிப்பட்ட அனேகபுது
மைகளைவழியில்கண்டுமனமகிழ்ந்துசந்தோஷித்துடனே குனேன்என்
னும்பட்டணம்வந்துசேர்ந்தார்கள் அவ்வூரார்களும் இதைக்கண்டு
மெத்தப்புதுமையாய் எல்லோருஞ் சந்தோஷமானார்கள்.

இப்படி அவ்வூரில்இரண்டுவருஷம்வரைக்கும் வைத்து அலிமா
ளும்மூன்றும்வருஷம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமைதாயாரிடத்து
க்கு மக்கத்துக்குபிள்ளையைக்கொண்டுபோ யவ்வூரில்நாலுமாதவ
ரைக்கு மிருந்து அதன்பின்பு நபிசல்லல்லாகு அலைகிவசல்லத்தை
கூட்டிக்கொண்டு தன்னூர்குனேனென்னும் பட்டணம் வந்துசேர்ந்
தார்கள்-அதன்பின்புநபிசல்லல்லாகு அலைகிவசல்லமுக்குநாலுவரு
ஷமாச்சுது அப்போது முகம்மது அலிமாவைப்பார்த்து அம்மா அ
ண்ணன்மார்பகல்முழுதும் எங்கேபோகிறார்கள் இரவில்வருகிறார்க
ளேஎன்றுகேட்டார் அதற்குஅலிமாஎன்மகனே உன் அண்ணமார்கா
ட்டுக்கு ஆடுமாடுமேய்க்கப்போகிறார்களென்றுசொல்ல அதைக்கே
ட்டுநபியுல்லாவும் நானுங்கூடப்போகிறேனென்றார் அப்படியேஅ
லிமாநபியுல்லாவைச்சிங்காரித்து கூடஅனுப்பினார்கள்அப்போதுபிள்
ளைகளிருவரை பாதுஷாவாகச்செய்து மற்றவர்எவலாளிகளாக விளை
யாடிக்கொண்டிருந்தார்கள்அவ்வேளையில்இரண்டுபேர்வந்தார் அவர்
களின்ஒருவர்கையில்கட்டோராவும்ஒருவர்கையில்கத்தியுமிருந்தது அ
வர்களைக்கண்டு பிள்ளைகளெல்லாம்ஓடிப்போனார்கள்நபியுல்லாவும்ஓ
டஎழுந்தார்அப்போது அவர்களிரண்டுபேரும்நபியுல்லாவுடையகை
யைப்பிடித்துமரத்தடியில் உட்கார்த்திமேல்லாத்தி வயற்றைக்
கீறிவயற்றிலுள்ளே தாமரைக்காயைக்கிழித்துஅதிலுள்ளேயிருக்கிறம்
சகடுகள்குற்றங்கள் மற்றக்கெடுதலானவை எல்லாம்வெளியேயெ
டுத்து அதைகழுவிபதற்குள்ள அறிவுஞ்சபறும் நற்குணம் இப்படி

போற்கொத்தவைவெல்லாதிறப்பி அதைவயிற்றினுள் வைத்து மார்பைத்தடவினார்கள் உடனேநபியுல்லா எழுந்துபார்க்க ஒரு தழும்புமில்லாதிருந்தது அப்போது இந்த மலக்காகிய சிபுறாயீல் மீக்காயீல் இவர்கள் சர்வமோஆலம்நபிசல்லல்லாகூ அலேகிவசல்லமுடைய தலையில்கையைவைத்து முத்தியிட்டு கபீபுல்லாவென்றும் பேரும்வைத்து பலபலவிதமாகப்புகழ்ந்து வானலோகம் போய் விட்டார்கள் இந்தச்சேதியைபிள்ளைகள் அலிமாவுக்குப்போய்ச்சொல்ல அதைஅலிமாக்கேட்டு ஓடோடியும்வந்து பார்க்கும்போது நபியுல்லாவானத்தை பார்த்துக்கொண்டிருக்கக்கண்டார் அலிமாவந்து எம்மகனென்று கட்டி அணைத்துமுத்தியிட்டு சரீரத்தைபார்க்கவும் எங்கிலுங்காயமில்லை அப்போது நபியுல்லா அலிமாவுக்கு நடந்த சங்கதி எல்லாம் சொல்லினார் அது கேட்டு அலிமா பிள்ளையை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்தார்கள் இப்படி நபிசல்லல்லாகூஅலேகி வசல்லம் மூக்கு (௨௰)ம் வயதிலும் (௪௰)ம் வயதிலும் மிகுறுசுக்குப் போகும்போதும் வயிற்றைக்கிழித்ததாய் சொல்லப்படுகிறது.

இதுவெல்லாம் பீவிஅலிமாவும்ஆரிசுங்கண்டு இனிமேலிந்தப்பிள்ளையையிவ்விடத்தில்வைத்திருந்தால்நமக்கும்இப்பிள்ளைக்குமேதேதோவருத்தங்கள்வந்து நேரிடுவதாயிருக்கிறபடியினாலே இனிமேல் வைத்திருக்கலாகாதென்று ஆலோசனைசெய்து சர்வமோஆலம்நபிசல்லல்லாகூஅலேகிவசல்லம் அவர்களைக்கொண்டுபோய்விட ஒரு ஒட்டையின்மேலேற்றிக்கொண்டுபோகிறவழியி லிறக்கியிருந்தஅலிமா பிள்ளையை மடியில்வைத்துக்கொண்டிருக்குஞ்சமையத்தில்மின்னல் மின்னுதற்போலிருக்கவு மடியிலிருந்தபிள்ளையைக்காணோம்அப்போது அலிமா அழுதழுதுதேடும்சமயத்தில் அக்காட்டிலொருகிழவன்வந்து இச்சேதியைக் கேட்டு அழைத்துப்போய் அக்காட்டிலிருந்த ஒருதெய்வத்தைக் கேழ்க்கவும் அதுமுகம்மதுடைய பேரைச் சொல்லவும் முட்டிகீழேவிழுந்தது அதைக்கண்டுபயந்துவந்துவிட்டார்கள் அலிமாவும்ஆரிசும்நேராய்மக்கத்துக்குவந்து இச்சேதியைஅபுதுல்முத்தலிபுக்குச்சொல்ல அவர்கேட்டுநகருமுழுமும்ஆள்களை அனுப்பித்தேடினார் எங்கேயும்அவர் அகப்படவில்லை அதினால்எல்லவரும்துயரமாயிருக்கச்சே அப்பாஒருசத்தம்வந்தது மக்கத்தின்காபத்துல்லாவுக்குதென்புறமாவொருவாழைத்தோட்டமிருக்கிறது அதில் அந்தப்பிள்ளையிருக்குதென்று கேட்டவுடனே அபுதுல்முத்தலிபுஞ்சிலபேருமாகப்போய் சர்வமோஆலம்நபிசல்லல்லாகூஅலேகிவசல்லத்தையெடுத்துக்கொண்டுவீட்டுக்குவந்தார்கள் அலிமாவும்ஆரிசும்சிலநாள்மக்கத்திலிருந்துபின்பு இருவரும் ஹுனைனென்னும் பட்டணம்வந்துசேர்ந்தார்கள்.

பின்பு நபிசல்லல்லாகு அலேகிவசல்லத்தை பிபி ஆமினு தன்வீட்டில் வைத்திருந்து வளர்த்துக்கொண்டிருக்கிற நாளையில் பிபி ஆமினு தன்தாயார்வீட்டுக்குப்போக மதினத்துக்குப்போய் அங்கேசிலநாளிருந்து அவ்விடம்விட்டு வருகிறவழியில் அபுவாவென்னுமூரில்வந்துதங்கினார் அப்போது அல்லாகுத்தாலாவின் கட்டளைப்படிபிபி ஆமினுமவுத்தாயினார்கள் அப்போதநபிக்கிவயது ஆறுவருஷமும் ஒருமாதமுமாயிருந்தது இந்தசேதியை அபுதல்முத்தலிக்குத் தெரியப்படுத்தினார்கள் அதை அபுதல்முத்தலிபு கேட்டு ஆள்களையனுப்பி நபியுல்லாவை தருவித்துத் தன்வீட்டில் வைத்து வளர்த்துக்கொண்டிருக்கிறநாளையில் அவ்வூரில்மழையில்லாமலிருந்தது அப்போது நபியை அபுதல் முத்தலிபு அழைத்துக்கொண்டுபோய் தவுசென்கிற இடத்தில் நின்று நபியுல்லாவை கையையேந்தச்சொன்னார் கையையேந்தினவுடனே அல்லாகுத்தாலா பெருமழையையிறக்கினான் அதைக்கண்டு எல்லாருக்கும் நபிசல்லல்லாகு அலேகிவசல்லத்தின்பேரில் மிகுந்த பிரியமா யிருக்கிற நாளையில் அபுதல் முத்தலிபும் இறந்துபோனார் அப்போது நபியுல்லாவுக்கு வயது எட்டுவருஷமும் இரண்டுமாதமுமாயிருந்தது அதன்பின்பு நபிசல்லல்லாகு அலேகிவசல்லத்தை அபுத்தாலிபுஎடுத்துவளர்த்துக்கொண்டார்.

அப்படி நபிசல்லல்லாகு அலேகிவசல்லம் அபுத்தாலிபுனுடைய வீட்டில் வளர்பிறை வளர்வதுபோல நாளுக்குநாள் வயது ஏறிக்கொண்டேவந்தது அப்போது நபியுல்லாவுக்கு வயது (௨௫) ஆகநிறைந்தது அப்போது தன்மனதில் வியாபாரஞ் செய்யவேணுமென்று நினைத்து அபுத்தாலிபினிடத்தில் வந்து தன்மனதில் நினைத்தவையைச்சொன்னார் அதுகேட்டு அபுத்தாலிபு நம்முடைய பிள்ளைக்கிப்போது வியாபாரஞ்செய்ய கருத்தாயிருக்குதே என்றுபொருளில்லையே இதற்கென்னசெய்வதென்று ஆலோசித்தப்பிபுடனே நான்கு வலீதினுடையமகளாகிய கொதைஜாக்கிட்டே போய் வர்த்தகத்துக்காக முதல் கேழ்க்கிறேன் கொடுத்தால் அதைவாங்கி வருகிறேனென்று சொல்லிவிட்டு அபுத்தாலிபுகொதைஜாவின் வீட்டுக்குப்போனவுடனே கொதைஜாநாயகம் அபுத்தாலிபுக்கு மிகுந்தசங்கைசெய்து நல்லவிரிப்பில் உட்காரவைத்து இந்த மிஸ்கீனாகிய அடியாள்வீட்டுக்கு தாங்கள்வரவேண்டியவேலையென்னவென்றுகேழ்க்கவும் அதற்கு அபுத்தாலிபு தான்நினைத்துவந்தவையைச்சொல்ல அதை கொதைஜாநாயகங்கேட்டு தங்களுக்கில்லாதபொருள் யாருக்கு கொடுக்கப் போகிறேன் அப்படியே வாங்கிக்கொண்டுபோவீர்நாளையதினம் தாங்கள்வரும்போது தங்கள் பின்

ளையாகியமுகம்மதையும் கூட அழைத்துக்கொண்டுவந்து வாங்கிக்
கொண்டுபோகுமென்று சொன்னார்கள் அதை அபுத்தாலிபுகேட்
டிருந்த சந்தோஷத்துடனே வீட்டுக்குவந்து நபிசல்லல்லாகு அ
லைகிவசல்லமுக்குத் தெரிவித்தார் மற்றநாள் இருவரும் கொதை
ஜாநாயகி வீட்டுக்குப்போனார்கள் அதைகொதைஜாகண்டு நல்லவி
ரிப்புகள்விரித்து அதிலிருவரையு முபசாரச்சொல்லி யிருத்தி அன்
புஉபசாரஞ்செய்து இருவருக்குவிருந்து கொடுத்துத் தன்னிட
த்திலிருந்து ஷாமில் சிலவாகுஞ்சரக்குகள் இருநூறொட்டகையிலும்
இசைத்தொரு நூறுயிரத்தங்கசாசும் பணிவிடைசெய்ய இருப
து ஆள்களும் கூடகணக்கெழுத எமசறவும்போய்படியாய் மைசு
றவுக்குச் சொல்லிப்புத்திமதிகளும் சொல்லி கூட்டி அனுப்பி
